


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 219 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை

Chennai Volume: 01 Issue: 219 Sunday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

# நாடு முழுவதும் ரம்ஜான் பண்டிகை கொண்டாட்டம்

**புதுடெல்லி, மார்ச் 22:**

ரம்ஜான் பண்டிகையை நாடு முழுவதுமுள்ள இஸ்லாமிய மக்கள் இன்று கொண்டாடி வருகின்றனர். ரம்ஜான் முடிவுக்கு வந்ததற்கான அறிகுறியாக பிறை சந்திரன் நேற்றிரவு தெரிந்தது. இதனை தொடர்ந்து இன்று காலையில் இருந்து, மசூதிகளுக்கு சென்ற அவர்கள் தொழுகையில் ஈடுபட்டனர். நன்றியுணர்வை பிரதிபலிக்கும் வகையில் சமூக மக்கள் ஒன்றாக திரண்டு தங்களுடைய அன்பை பகிர்ந்து கொண்டனர். அமைதி மற்றும் வளத்திற்காக வேண்டி கொண்ட அவர்கள், குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் மற்றும் அண்டை வீட்டாருடனும் கொண்டாட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதன்படி, டெல்லியில் உள்ள புகழ் பெற்ற ஜமா மசூதியில் இன்று காலையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு இறை வணக்கத்தில் ஈடுபட்டனர். புனித ரம்ஜான் மாத நிறைவை குறிக்கும் வகையில், புதிய ஆடைகளை அணிந்து வந்து ஒற்றுமையாக தொழுகையில் ஈடுபட்டனர். மும்பையிலும், ஜுமா மஸ்ஜித் மஹிம் தர்காவில் மக்கள் திரளாக வந்து தொழுகை நடத்தினர். தமிழகத்திலும் பல்வேறு இடங்களில் ரம்ஜான் பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. ரம்ஜான் மாத நிறைவை முன்னிட்டு, நேற்று கடை வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. புதிய ஆடைகளை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். கடைகளில் இனிப்பு, பலகாரங்கள் விற்பனையும் ஜோராக நடந்தது. தொண்டு, இரக்கம் உள்ளிட்டவற்றின் மீதுள்ள மதிப்புகளை மக்களிடையே மீண்டும் வலியுறுத்தும் வகையில் இந்த ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதில், மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுதல் மற்றும் மற்றவர்களின் நலனில் கவனம் கொள்ளும் இஸ்லாமிய கொள்கைகளை பிரதிபலிக்கும் வகையில் உணவு, உடை வழங்குதல் மற்றும் ஆதரவற்றோருக்கு பலரும் இயன்ற உதவிகளை செய்து வருகின்றனர்.

## இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகை



இதனிடையே, வளைகுடா நாடுகளில் நேற்று ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட்டது. பிறை தெரிவதில் உள்ள மாறுபாடு காரணமாக நேற்று இந்தியா, மலேசியா உள்ளிட்ட சில நாடுகளில் ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட்டது. முன்னதாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். அதனை தொடர்ந்து வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க படைத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் போர் மேகம் சூழ்ந்துள்ளது. இந்த சூழலுக்கு மத்தியில் நேற்று வளைகுடா நாடுகளில் அமைதியான முறையில் ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட்டது.

சவுதி அரேபியாவில் உள்ள இஸ்லாமியர்களின் புனித தளமான மெக்காவில் லட்சக்கணக்கான இஸ்லாமியர்கள் தொழுகையை நிறைவேற்றினர். லெபனான் நாட்டில் இஸ்ரேல்-ஹிஸ்புல்லா இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், அந்நாட்டின் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள மசூதியில் ஏராளமான மக்கள் திரண்டு அமைதிக்காக பிரார்த்தனை செய்தனர். இதே போல் கத்தார், பஹ்ரைன் உள்ளிட்ட அனைத்து வளைகுடா நாடுகளிலும் நேற்று ரம்ஜான் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன.

மேலும், போரால் பாதிக்கப்பட்டுவாழ்வாதாரத்தை இழந்த காசா மக்கள், வீதிகளில் திரண்டு ஈகைத் திருநாள் சிறப்பு தொழுகையைமேற்கொண்டனர். அதே சமயம், ஜெருசலேம் நகரில் உள்ள புகழ் பெற்ற அல்-அக்சா மசூதியில் தொழுகை நடத்துவதற்கு, பாதுகாப்பு காரணங்களை மேற்கோள் காட்டி, இஸ்ரேல் காவல்துறை தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## குடியரசுத் தலைவர் முர்மு, பிரதமர் மோடி வாழ்த்து!



ரமலான் திருநாளையொட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ரமலான் திருநாளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, தனது எக்ஸ் பக்கத்தில் இந்த ஆசிர்வதிக்கப்பட்ட தருணத்தில் மக்கள் அனைவருக்கும், குறிப்பாக முஸ்லிம் சகோதர, சகோதரிகளுக்கு ரமலான் வாழ்த்துகள்.

இந்தத் திருநாள், சுயக் கட்டுப்பாடு, சேவை, அன்பு குறித்த போதனைகளை நமக்குக் கற்பிக்கிறது. இந்தத் தருணத்தில், நமது சமூகத்தையும் நாட்டையும் வலுப்படுத்துவோம் என்று உறுதியளிப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனும் வாழ்த்து தெரிவித்து, இந்த மகிழ்ச்சியான தருணத்தில் நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் அன்பை ஊக்குவித்து மகிழ்ச்சியையும் வெற்றியையும் ஏற்படுத்தட்டும் என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து, ரமலான் திருநாளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் மோடி, இந்தத் திருநாள் எல்லா இடங்களிலும் சகோதரத்துவத்தையும் அன்பையும் மேலும் அதிகரிக்கட்டும். அனைவரும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(22-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-8
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தி நள்ளிரவு 12.15 வரை பிறகு பஞ்சமி.
நட்சத்திரம்:
பரணி நள்ளிரவு 1.26 வரை பிறகு கார்த்திகை
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் – மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | அனுகூலம் |
| ரிஷபம் | லாபம் |
| மிதுனம் | வரவு |
| கடகம் | பாராட்டு |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | புகழ் |
| துலாம் | அன்பு |
| விருச்சிகம் | சிந்தனை |
| தனுசு | தெளிவு |
| மகரம் | பரிசு |
| கும்பம் | விருத்தி |
| மீனம் | அமைதி |

## டெல்லியில் 25-ந்தேதி கூடுகிறது காவிரி மேலாண்மை ஆணையம்



**புதுடெல்லி, மார்ச் 22:**

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 49-வது கூட்டம் டெல்லியில் அந்த ஆணைய அலுவலகத்தில் வருகிற 25-ந்தேதி நடைபெற இருப்பதாக தக வல்கள் வெளியாகி உள்ளன.

ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், காவிரியோடு தொடர்புடைய தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் அதிகாரிகளுக்கு இதுகுறித்த தகவல்கள் அனுப்பப்பட்டு இருப்பதாக தெரிகிறது.

# ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை நிறைவுசெய்ய ட்ரம்ப் பரிசீலனை

**வாஷிங்டன், மார்ச் 22:**

ஈரானுக்கு எதிரான தங்கள் நாட்டின் ராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இருப்பினும், இது போர் நிறுத்தம் சார்ந்து இருக்காது என சூசகமாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் அவர் கூறியது: “அமெரிக்க தேசம் தனது நோக்கத்தை எட்டுவதில் கிட்டத்தட்ட நெருங்கிவிட்டது. அதனால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் எங்களது ராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்துவது குறித்து பரிசீலித்து வருகிறோம்.

எங்கள் தரப்பு போர் நிறுத்தத்தை நாடவில்லை. ஏனெனில், இதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளதாக கருதுகிறேன். எதிர்தரப்பை முற்றிலுமாக அழிக்கும்போது போர் நிறுத்தம் அவசியமற்றது.

ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா கண்காணிக்காது:

ஹார்முஸ் ஜலசந்தியை கப்பல் போக்குவரத்து சார்ந்து பயன்படுத்தும் நாடுகள்தான் அதை கண்காணிக்க வேண்டும். அமெரிக்கா அந்தப் பணியை செய்யாது. எங்களிடம் அது தொடர்பாக கேட்டுக்கொண்டால் அந்த முயற்சியில் நாங்கள் உதவுவோம். ஈரான் அச்சுறுத்தல் முழுவதுமாக ஒழிக்கப்பட்டால் அதற்கு கூட தேவை இருக்காது.

ஈரான் உடன் பேச்சுவார்த்தை நடத்தை அமெரிக்கா தயார். ஆனால், அவர்கள் பக்கம் அதை முன்னெடுக்க யாரும் இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்” என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து நடத்திய தாக்குதலில் ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அலி கமேனி கொல்லப்பட்ட பிறகு அந்த பொறுப்பை ஏற்ற மொஜ்தபா கமேனி பொதுவெளியில் தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கார்க் தீவை அமெரிக்கா கைப்பற்றுவது குறித்து செய்தியாளர்கள் முன்வைத்த கேள்விக்கு பதில் அளித்த ட்ரம்ப், ‘அந்த திட்டம் எங்களுக்கு இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆனால், அந்த தீவில் இருந்த ராணுவ நிலைகளை முற்றிலுமாக அளித்துள்ளோம்’ என்றார்.


அவரது இந்த பேச்சு மூலம் ஈரான் போர் முடிவுக்கு வருகிறதா என்ற கேள்வியை எழுப்பி உள்ளது.

முன்னதாக, இஸ்ரேல் தரப்பில் ஈரானின் தெற்கு பார்ஸ் இயற்கை எரிவாயு வயல்கள் தாக்கப்பட்டன. அது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என ட்ரம்ப் சொல்லி இருந்தார். இதன் பின்னர் அமெரிக்க கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப எரிவாயு வயல்கள் மீதான தாக்குதலை நிறுத்தி கொண்டதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்தார்.

இந்தச் சூழலில்தான் ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை மட்டுப்படுத்துவது குறித்து ட்ரம்ப் பேசியுள்ளார்.

# தேர்தல் ஆணையர்கள் நியமன வழக்கு: தலைமை நீதிபதி விலகல்

**புதுடெல்லி, மார்ச் 22:**



தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில், கடந்த 2023 டிசம்பரில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டதிருத்தத்தில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பதிலாக, பிரதமர் பரிந்துரைக்கும் மத்திய அமைச்சர் குழுவில் இடம்பெறுவார் என்ற அம்சம் சேர்க்கப்பட்டது.

புதிய சட்டத்தின்படி தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டதை ரத்து செய்யக் கோரி, ஜெயா தாக்குர் உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அந்த மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யா காந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது.

இந்த வழக்கை விசாரித்தால் ஆதாய முரண் குற்றச்சாட்டு எழுமென்று குறிப்பிட்டு, விசாரணையில் இருந்து தலைமை நீதிபதி விலகினார். மேலும் எதிர்காலத்தில் தலைமை நீதிபதி அல்லாத பிற நீதிபதிகள் அடங்கிய அமர்வில் இந்த மனுவை பட்டியலிடவும் உத்தரவிட்டார்.




# நிலுவையில் உள்ள வழக்கு விவரங்களை வேட்பாளர்கள் ஊடகங்களில் விளம்பரம் செய்ய வேண்டும்: தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 22:**

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நிலுவையில் உள்ள வழக்குகள் விவரங்களை விளம்பரம் செய்ய வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் அல்லது தண்டனை விவரங்களை உரிய படிவங்களில் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்ய வேண்டும்.

அதேபோல், அத்தகைய வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் கட்சிகளும் அந்த விவரங்களை ஊடகங்கள் மற்றும் கட்சியின் அதிகாரப்பூர்வ வலைதளங்களில் வெளியிட வேண்டும்.



தேர்தல் ஆணையம் இதற்கென பிரத்யேக படிவங்களை வரையறுத்துள்ளது. வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளுக்கு அடுத்த நாள் முதல், வாக்குப்பதிவு முடிவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பு வரை 3 முறை வெவ்வேறு நாட்களில் இந்த விளம்பரங்களை வெளியிட வேண்டும். வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட 48 மணி நேரத்துக்குள் அல்லது வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பாகவே (இதில் எது முந்தையதோ அதன் படி) விவரங்களை வெளியிட வேண்டும்.

இது தொடர்பான அறிக்கையை அடுத்த 72 மணி நேரத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான முழுமையான அறிவுரைகள், அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பட்டியலை அறிந்து கொள்ள பொதுமக்கள் மற்றும் வேட்பாளர்கள் WWW.ELECTIONS.TN.GOV.IN என்ற இணையதளத்தை பார்வையிடலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் வெள்ளிக்கிழமை திவ்ய சேவை



பாக்கம் ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் வெள்ளிக்கிழமை திவ்ய சேவை.

## கேட்ட வரம் தரும் முத்துமாரியம்மன் கோவில் பங்குனி திருவிழா சிறப்பு யாகத்துடன் தொடங்கியது

**மானாமதுரை, மார்ச் 22:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மிளகனூர் ஊராட்சி அன்னவாசல் ரோட்டில் எஸ்.கரிசல்குளம் கிராமத்தில் பிரசித்தி பெற்றகேட்டவரம்தரும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக் கோவில் வளாகத்தில் கோவில் நிறுவனர் ஸ்ரீ லெட்சுமண சுவாமி ஜீவசமாதி உள்ளது.இங்கு ஆண்டு பங்குனி தோறும் திருவிழா நடைபெறும் . வரும் 29ந்தேதி பங்குனி 15ஞாயிறு அன்று மாலை காப்புகட்டுதலுடன் திருவிழா நடைபெறும்.

பங்குனி திருவிழா தொடங்குவதை முன்னிட்டு கேட்ட வரம் முத்துமாரியம்மன் கோவிலில் சிறப்பு கோபூஜை மற்றும் சிறப்பு கணபதி ஹோமம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து திருவிழா நடைபெறும் நாட்களில் திருவிளக்கு பூஜை, மாவிளக்கு வழிபாடு, பூச்சொரிதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முக்கிய விழாவாக வரும் ஏப்ரல் 6 ந்தேதி திங்கட்கிழமை மாலை (06-04-2026)மாபெறும் அக்கினி சட்டி திருவிழா நடைபெறும் இதில் ஏராளமான பக்தர்கள்







அக்கினி சட்டி, அழகு குத்தி சாமியாடி வந்து நேர்த்தி கடன் செலுத்துவார்கள். இரவு சிறப்பு அன்னதானம் நடைபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் கேட்ட வரம் தரும் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயம் நிர்வாகி செர்டு பாண்டி செய்து வருகிறார். அன்னதானம் செய்ய தொடர்புக்கு 9442000451

## பன்னாட்டு வன நாள் விழிப்புணர்வு மலையேற்றம்



**கோவில்பட்டி,மார்ச் .22:**

பன்னாட்டு வன தினத்தை முன்னிட்டு (International Forest Day.March,21) கேரள மாநிலம் மூணாறில் கேரளா வனத்துறை மீசைப்புலி மலையில் இளைஞர்களுக்கு மலையேறும் பயிற்சி நடத்தியது. சுற்றுச்சூழல், காடுகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மலையேற்ற பயிற்சி நடத்தப்பட்டது.

முன்பதிவு செய்து தேர்வு செய்யப்பட்ட 34 இளைஞர்கள் மற்றும் யுவதிகளும் பங்கு பெற்றனர். மலையேற்ற பயிற்சியில் தமிழகத்தைச் சேர்ந்த மூவர் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கோவில்பட்டியை சேர்ந்த மென் பொறியாளர் கோபி கிருஷ்ணா, இளம்மென் பொறி டெவலப்பர் நாகஜோதி மற்றும் மேனாள் நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் சுப்பா ராஜூ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மலையேற்ற பயிற்சி குழுவினர் முன்னதாக அடிவார முகாமில் உள்ள கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டு தக்க பயிற்சிக்கு பின்னர் மலையேறினர். மூணாறில் உள்ள 8842 அடி உயரம் கொண்ட மீசப்புலி மலை என்ற சிகரத்தில் மலையேற்ற குழுவினர் மலையேறி சாதனை படைத்தனர். இந்த மலையேற்ற குழுவினரை இடுக்கி மாவட்ட வனத்துறை அலுவலர் பாராட்டினார்.

## மரக்கன்றுகள் நடும் விழா



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த அம்பலூர் ஊராட்சி பகுதியில் உலக வன தினத்தை முன்னிட்டு ஊராட்சி தலைவர் முருகேசன் மரக்கன்றுகளை நடும் விழா நடைபெற்றது.உடன் உள்ளாட்சி பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மகளிர் உள்ளனர்

## "திமுகவை வீழ்த்துவதே இலக்கு!" அமித்ஷாவுடன் ஆலோசனைக்குப்பின் டிடிவி தினகரன் பேட்டி

**டெல்லி, மார்ச் 22:**

டெல்லியில் அமித்ஷா உடனான சந்திப்பிற்கு பிறகு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

234 தொகுதிகளிலும் வெற்றி பெற எவ்வாறு செயல்பட வேண்டும் என அமித்ஷாவுடன் ஆலோசனை நடந்தது.

தொகுதிப்பங்கீடு குறித்து அமித்ஷாவுடன் பேசவில்லை. ஒற்றுமையுடன் தேர்தலை எதிர்கொள்வது குறித்தே பேசினேன்.

பீகாரில் வெற்றிபெற்றதை போல வரும் தேர்தலில் தமிழ்நாட்டிலும் வெற்றிபெறுவது தொடர்பாக ஆலோசனை நடத்தினோம்.

ஒவ்வொரு முறையும் உள்துறை அமைச்சர்



அமித்ஷாவும், பியூஷ் கோயலும் சென்னை வரமுடியாது என்பதால் டெல்லி வந்தோம்.

மத்திய அரசு இணக்கமாக செயல்படாததால் தமிழ்நாட்டிற்கு முறையாக நிதி வரவில்லை.

சசிகலாவை தேசிய ஜனநாயக கூட்டணியில் கொண்டு வருவதற்கான எந்த ஒரு முயற்சியும், திட்டமும் இல்லை.

அனைவரும் ஒற்றுமையாக செயல்பட்டு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகத்தை தோற்கடிப்போம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிபிஎம் மாநில குழு கூட்டம் தொடங்கியது



**சென்னை, மார்ச் 22:**

சென்னையில் உள்ள அலுவலகத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு கூட்டம் தொடங்கியது.

சிபிஎம் அகில இந்திய பொதுச்செயலாளர் பேபி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 23ம் தேதி ஒரேகட்டமாக நடைபெறுகிறது.

திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்து வருகிறது.

மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் தலைமையில் மாநிலக்குழு கூட்டம் தொடங்கியுள்ள நிலையில், தொகுதி பங்கீடு குறித்து இறுதி முடிவு எடுக்க ஆலோசனை நடைபெறுகிறது.

## NDA கூட்டணியில் TVK இணைவதை ஆதவ் அர்ஜுனா தடுத்தார்

### ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் பேட்டி

**புதுச்சேரி, மார்ச் 22:**

தனியார் செய்தி நிறுவனத்திற்கு பேட்டி அளித்த எல்.ஜே.கே. கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், ஆதவ் அர்ஜுனா மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் கூறுகையில்,

தேசிய ஜனநாயக கூட்டணியில் த.வெ.க. இணைவதை ஆதவ் அர்ஜுனா தடுத்தார். த.வெ.க.விற்கும் எனக்கும் எந்த தனிப்பட்ட பிரச்சனையும் இல்லை.

புதுச்சேரி மாநில சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் என். ஆர். காங்கிரஸ், அதிமுக, எல். ஜே.கே ஆகிய கட்சிகள் இணைந்து போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. நீண்ட இழுபறிக்கு பிறகு நேற்று நடைபெற்ற இறுதி கட்ட பேச்சுவார்த்தையில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு 16 இடங்களும், பா.ஜ.க.வுக்கு- 10, அ.தி.மு.க-வுக்கு- 2, எல். ஜே.கே.-2 என தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

எல்.ஜே.கே. (லட்சிய ஜனநாயக கட்சி) கட்சியின் தலைவராக ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் செயல்பட்டு வருகிறார். சமீபத்தில் கட்சியின் வழக்கறிஞர் அணி உள்ளிட்ட புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு, கட்சிப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். எல்.ஜே.கே. சந்திக்கும் முதல் சட்டசபை தேர்தல் இதுவாகும்.



இதனிடையே, எல்.ஜே.கே. கட்சியின் தலைவரான ஜோஸ் சார்லஸ் மார்ட்டினுக்கும் த.வெ.க. நிர்வாகி ஆதவ் அர்ஜுனாவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்த நிலையில், தனியார் செய்தி நிறுவனத்திற்கு பேட்டி அளித்த எல்.ஜே.கே. கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், ஆதவ் அர்ஜுனா மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் கூறுகையில்,

தேசிய ஜனநாயக கூட்டணியில் த.வெ.க. இணைவதை ஆதவ் அர்ஜுனா தடுத்தார். த.வெ.க.விற்கும் எனக்கும் எந்த தனிப்பட்ட பிரச்சனையும் இல்லை.

எனக்கும் என் தந்தைக்கும் இடையே பிளவை ஆதவ் அர்ஜுனா ஏற்படுத்தினார். தான் மட்டுமே அறிவாளி என்ற ரீதியில் ஆதவ் அர்ஜுனா செயல்படுவதாக கூறினார்.

முன்னதாக, கொளத்தூரில் நடைபெற்ற த.வெ.க. பொதுக் கூட்டத்தில் பேசிய ஆதவ் அர்ஜுனா, "த.வெ.க. 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகிறது. பல ஆஃபர்களை த.வெ.க. தலைவர் விஜய்க்கு கொடுத்தார்கள். ஆனால், அனைத்து ஆஃபர்களையும் விஜய் நிராகரித்துவிட்டார். 90 தொகுதிகள் தருவதாக பேரம் பேசினார்கள். ஆளுக்கு இரண்டரை ஆண்டுகள் முதல்வராக இருக்கலாம் என பேரம் பேசினார்கள். பதவிக்காக டெல்லிக்கு அடிபணிய மாட்டோம்" என்று விஜய் கூறியதாக தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து த.வெ.க. சார்பில் நடைபெற்ற இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் பேசிய விஜய், அந்த கூட்டணி, இந்தக் கூட்டணி என எந்த கூட்டணிக்கும் தவெக போகவில்லை, நாம் தனித்துதான் போட்டியிடுகிறோம். எனவே யார் எது சொன்னாலும் நம்பாதீர்கள் என்று கூறியிருந்தார்.

கூட்டணி தொடர்பாக கட்சியை சேர்ந்தவர்களே மாறி, மாறி கூறியது அரசியல் வட்டாரத்தில்பேசும்பொருளான ஏற்படுத்திய நிலையில், ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் தற்போது கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தேர்தல் கூட்டணிக்காக Vijay வீட்டு வாசலை இ.பி.எஸ். தட்டிக்கொண்டிருக்கிறார் - ஓ.பி.எஸ். விமர்சனம்

**ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 22:**

ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இதில் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது:-

தேர்தல் கூட்டணிக்காக விஜய் வீட்டு வாசலை எடப்பாடி பழனிசாமி தட்டிக் கொண்டிருக்கிறார். எடப்பாடி பழனிசாமியும், உதயகுமாரும் அதிமுகவை குழி தோண்டி புதைத்துவிட்டார்கள்.

அனைவரையும் ஒரு தாய் மக்களாக அரவணைத்து எந்த ஒரு பிரச்சனைக்கும் இடம் கொடுக்காமல் திறம்பட ஆட்சி செய்து வருகிறார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அனைத்து திட்டங்களும் மக்களை சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார். அண்ணா, கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா, ஸ்டாலின் ஆகியோர் மட்டுமே மக்கள் தேர்ந்தெடுத்த முதலமைச்சர்கள். எடப்பாடி பழனிசாமி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அல்ல. நாமினி முதலமைச்சர்.

தமிழகத்தில் மீண்டும் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் பதவி ஏற்பார் என்றார்.

கூட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர, ஒன்றிய, வத்திராயிருப்பு நகர, ஒன்றிய நிர்வாகிகள், பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அரசு ஆஸ்பத்திரியில் பணியில் இருந்த பெண் டாக்டரை கத்தியால் குத்தி கொன்ற ஆசிரியருக்கு ஆயுள் தண்டனை

**கன்னியாகுமரி,மார்ச்22:**

கேரளம் மாநிலம் கொல்லம் மாவட்டம் கொட்டாரக்கரை தாலுகா அரசு மருத்துவமனையில் டாக்டராக பணியாற்றியவர் வந்தனா தாஸ் (வயது 23). கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் 10-ந்தேதி இவர் பணியில் இருந்த போது, சிகிச்சைக்கு வந்த வேலியம் செருக்காரக்கோணத்தை சேர்ந்த பள்ளி ஆசிரியரான சந்தீப் (44) என்பவர் திடீரென வன்முறையில் ஈடுபட்டார். ஆஸ்பத்திரியில் இருந்த அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தும் கத்தியை எடுத்த அவர், டாக்டர் வந்தனா தாசை சரமாரியாக குத்தினார். இதில் அவர் பரிதாபமாக இறந்தார்.

ஆஸ்பத்திரியில் பணியில் இருந்த பெண் டாக்டர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக ஆசிரியர் சந்தீப்பை போலீசார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கு கொல்லம் கூடுதல் கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் சந்தீப் குற்றவாளி என கடந்த 17-ந்தேதி நீதிபதி வினோத் தீர்ப்பளித்தார். அவருக்கான தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என



தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியர் சந்தீப்புக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் விதிப்பதாக நீதிபதி வினோத் அறிவித்தார்.

கொலைக்கு ஆயுள் தண்டனை, பிரிவு 307-ன் கீழ் 10 ஆண்டுகள் மற்றும்0 கொலை முயற்சிக்கு பிரிவு 326-ன் கீழ் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும். மருத்துவமனை தாக்குதலுக்கு 5 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்படும். இந்திய தண்டனைச் சட்டத்தின் 323, 324, 332 மற்றும் 333 ஆகிய பிரிவுகளின் கீழ் 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த பின்னரே, ஆயுள் தண்டனை தொடங்கும் என்று அரசுத் தரப்பு வக்கீல் கூறினார்.

மேலும் இது ஒரு அரிதான குற்றம் எனக் கண்டறியப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை அதிகரிக்க கோரி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.


## சசிகலாவுடன் கூட்டணி- ராமதாஸ் ஆதரவு பா.ம.க.வினர் அதிருப்தி

**சென்னை, மார்ச் 22:**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலையொட்டி 4 முனை போட்டி ஏற்பட்டுள்ளது. இதில் அ.தி.மு.க. கூட்டணியில் அன்புமணி இணைந்த நிலையில், ராமதாஸ் எந்த அணியில் இணைவார் என்று எதிர்பார்ப்பு நிலவி வந்தது. ஒரு காலத்தில் பா.ம.க.வுடன் கூட்டணி வைக்க தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஆர்வம் காட்டி வந்த நிலையில் தற்போது ராமதாஸ் தனித்து விடப்பட்டார்.

அன்புமணி அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்ததால் அங்கு ராமதாஸ் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் தி.மு.க. கூட்டணியில் இணைய முயன்ற போது அந்த கூட்டணியில் இருக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. இதையடுத்து விஜய்யின் தமிழக வெற்றிக்கழகத்திலும் கூட்டணி சேர முடியாத நிலை ஏற்பட்டு ராமதாஸ் தனித்து விடப்பட்டார்.ராமதாஸ் அணி பா.ம.க. யாருடன் கூட்டணி சேர்ந்து எப்படி தேர்தலை எதிர்கொள்ளப்போகிறது என்ற பரபரப்பு ஏற்பட்டது. அவரது ஆதரவாளர்களும் ராமதாசின் முடிவுக்காக காத்திருந்தனர்.

இந்த நிலையில் யாரும்



எதிர்பார்க்காத வகையில் திடீர் திருப்பமாக ராமதாஸ் தரப்பு பா.ம.க. சசிகலா புதிதாக ஆரம்பித்த அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக்கழகத்துடன் கூட்டணி அமைத்தது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் சசிகலா, ராமதாஸ் ஆகியோர் கையெழுத்திட்டு தமிழக, புதுச்சேரி சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள முடிவு செய்து உள்ளனர். இந்த கூட்டணிக்கு சேலத்தில் உள்ள ராமதாஸ் ஆதரவு பா.ம.க.வினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இது குறித்து சேலத்தை சேர்ந்த ராமதாஸ் ஆதரவாளரான முக்கிய பிரமுகர் ஒருவர் கூறும்போது,

சசிகலாவுடன் ராமதாஸ் கூட்டணி அமைத்ததை எங்களால் ஏற்க முடியவில்லை. இது தொடர்பாக விரைவில் கூட்டம் போட்டு எங்கள் எதிர்ப்பை காட்டுவோம். சேலம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் உள்ள பா.ம.க.வினர் இந்த கூட்டணிக்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர் என்றார்.

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

## ADVERTISE WITH US

CONTACT US
9438610756

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

## சிவா விஷ்ணு திருமண தகவல் மையம்

அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்

மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை

- ✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
- ✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
- ✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
- ✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்

தொடர்புக்கு: 9150989424

## Special Invitation

to retired seniors **house wives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- ♦ Flexible timing unlimited incentive
- ♦ No target work from home training provided

For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

## Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## ADIYOGI

REAL ESTATE WHOLESALE
VADACHENNAI CALL DRIVER

ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை

_CONTACT_
8939228901

## WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- ✓ Fast Developing Area
- ✓ Near Upcoming Airport
- ✓ Excellent Appreciation Value
- ✓ Suitable for Residential & Investment
- ✓ Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS – BOOK NOW!

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact
9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection...

we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary Unilevel Matrix Board Generation ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart

YOUR DESIRE, WE DELIVER

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## CAR WASH SUPREME

THE BEST CENTRE OF
SADHANA DEVI.K

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## அருள்தரும் தெய்வம்

தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact
8248951872

# கவிதை அரங்கம்!



காதலும்
காமமும்
இரண்டும் உயிரின்
இரு தளிர்கள்
ஒன்றை இன்றி மற்றொன்று
முழுமை பெறாது

உன்னை நினைக்கையில்
காலமே தேங்கி நிற்கும்
உன் காதலால் என்
இதயம்
மறுபடியும் முழுமையாக
உயிர் பெறுகிறது

உன்னுடன் பேசும்
ஒவ்வொரு நொடியும்
காலத்துக்கு அப்பாற்பட்ட
ஒரு சொர்க்கம்

நீ இல்லாத உலகம்
வெறும் நிறமற்ற ஓவியம்
உன் காதலே அதற்கு
உயிர் ஊட்டும் வண்ணம்

## வாழ்க்கை தத்துவம்...



கோபத்தில் கண்டதை
தூக்கிப் போடுவதைவிட
அந்த கோபத்தையே
தூக்கிப் போடுங்கள்

ஓவியத்திற்கு அழகு
சேர்ப்பது பல வண்ணங்கள்
அதுபோல தான் நம்
மனத்திற்கு அழகு
சேர்ப்பது நல்லெண்ணங்கள்

நிறம் மாறும்
பச்சோந்திகளை விட
அடிக்கடி தன் மனம்
மாறும் மனிதர்களிடமே
அதிக கவனம் தேவை

# ஈகை.



ஜாவித்துக்கு
வாப்பாவிடம் கேட்க
வேண்டும் என்று
ஆசைதான்! ஆனால்
நேரில் பார்த்தவுடன்
மறந்து போகிறான்! ஏதோ
ஒரு தயக்கம்.

அந்த நகரத்தில் முகமத்
டைலர் என்றால்
சின்னக்குழந்தையும்
சொல்லும். அவரது
டைலர் கடை அவ்வளவு
பிரசித்தம். குறித்த
நேரத்தில் சிறப்பாக
தையல் இருக்கும்.
இடைவிடாத உழைப்பு..
கண்டிப்பு.. அவரது
வெற்றிக்குக் காரணம்!

பண விசயத்தில் கெட்டி!
கஞ்சன் என்றும்
உறவினரே ஏசுவர்.
ஆயினும்
பள்ளிவாசலுக்காக..
பங்குத்தொகை.. ஜகாத்
தந்துவிடுவார்!
தவறாமல் தொழுவார்.

கடைக்கு வந்து
கடுமையாக உழைப்பார்.
இப்போதெல்லாம்
ஆயுத்த ஆடைகள்
ரெடிமேட் சர்டுகள்..
துணிவகைகள்
பரவி வருவதாலே..
அவரது கடைக்கு
கூட்டம் அவ்வளவாக
வருவதில்லை!
ஆயினும்
சோர்வடையாமல்..
மொத்தமாக துணிகளை
வாங்கி வந்து..
அதனை பல்வேறு
அளவுகளில் தைத்து
ஆடைகளாக்கி அடுக்கி
வைத்திருக்கிறார்!
வாடிக்கையாளர்கள்
யாரும் தராத
ஆர்டரைப் பற்றிக்
கவலைப் படாமல்..
தன் கைக்காசைப்
போட்டு யாருக்காக
இத்தனை சர்ட்டுகளை
துணிவகைகளை
தைக்கிறார்?
என்பதுதான் அவரிடம்
வேலைப் பார்க்கும்
ஜாவித்தின் கேள்வி!
ஈந்துவக்கும் திருநாளாம்
ஈகைத் திருநாள்
அவனது கேள்விக்கு
விடை தந்தது!

விடிந்தால் இரமலான்!
அதிகாலைத்
தொழுகைக்குப் பின்
அவர் அவசரமாக
கடையைத் திறந்தார்.
ஜாவிதை கடையைப்
பார்த்துக்கொள்ள
சொல்லிவிட்டு.. இரவு
பகலாக அவர் தைத்தத்
துணிகளை ஒன்றாக
மூட்டைக்கட்டி.. தன்
தோள்களில் சுமந்து
கொண்டு அவர் எங்கே
செல்கிறார்?
அதோ குடிசைப் பகுதி!
அங்கே தான் சென்றார்.
அவர் வருகையை
எதிர்பார்த்து ஏராளமான
மாற்றுத்திறனாளிகள்..
மூன்றாம்
பாலினத்தார்கள்..
காத்திருக்கிறார்கள்!

ஒவ்வொரு குடிசைமுன்
நின்றும்.. ஒவ்வொரு
மாற்றுத்திறனாளி
களுடன் அன்பாக
பேசியும் அவர்களுக்கு
ஏற்ற ஆடைகளை பரிசாக
அளிக்கின்றார் முகமது
டைலர்!
பளப்பாக ஆடை
அணிந்து வாசனைத்
திரவியங்களை
பூசிக் கொண்டு நாடி
வருபர்களுக்கு தருவது
மட்டும் ஈகை அல்ல!
ஏழைகளை நாடி..
ஊனமுற்றவர்களைத்
தேடி.. சென்று
குடிசைகளைத் தட்டி
ஒற்றை ஆடை அவர்
வழங்கினாலும் அது
அல்லா விரும்பும் *ஈகை
தானே!

வே.கல்யாண்குமார்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*ஒருத்தன் சர்க்கரை வாங்கிகிட்டு வந்தானாம். ஆனா 100G சர்க்கரை குறைஞ்சு இருந்துச்சாம் ஏன்.?*

*விடை: ஏன்னா நடந்து வந்த SUGAR குறைஞ்சிடும்ல அதான்.*

*சாப்பிட முடியாது கனி எது.?*

*விடை: பால்கனி.*



# தினம் ஒரு சமையல்



## மிளகு சுவரொட்டி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| சுவரொட்டி | -1/4 கிலோ |
| மஞ்சள் தூள் | -1/2 டீஸ்பூன் |
| மிளகுத்தூள் | -2 டேபிள் ஸ்பூன் |
| உப்பு | -தேவையான அளவு |
| நல்லெண்ணெய் | -2 டேபிள் ஸ்பூன் |
| இஞ்சி பூண்டு பேஸ்ட் | -2 டீஸ்பூன் |
| கரம் மசாலா | -1 டீஸ்பூன் |
| தண்ணீர் | -தேவையான அளவு |
| கொத்தமல்லி | -1கையளவு |
| கருவேப்பிலை | -2 கொத்து |
| வர மிளகாய் | -4 |

செய்முறை:



ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சேர்த்து பட்டை கிராம்பு ஏலக்காய் வரமிளகாய் இவை அனைத்தையும் சேர்த்து வதக்கவும்

அதன்பின் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து வதக்கவும்

இஞ்சி பூண்டு நன்கு வதங்கியதும் சுத்தம் செய்து வைத்துள்ள சுவரொட்டி சேர்த்து வதக்கவும்

சுவரொட்டி வதங்கியதும் மஞ்சள் தூள் மிளகுத்தூள் உப்பு கரம் மசாலா சேர்த்து வதக்கவும்

சிறிதளவு தண்ணீர் சேர்த்து வேக விடவும் சுவரொட்டி வெந்ததும் கொத்தமல்லி, கருவேப்பிலை சேர்த்து கிளறி இறக்கி விடவும்

## விடத்தேர் பயன்கள்



விடத்தேர் (BELL MIMOSA / SICKLE BUSH) ஒரு மூலிகை

இது ஒரு வகையான முள் செடி அல்லது சிறு மரம் ஆகும். இது பொதுவாக விடத்தலை என்றும் அழைக்கப்படுகிறதுவேர், பட்டை மற்றும் இலைகள் பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

இது முக்கியமாக வாத நோய்கள், காய்ச்சல், தோல் நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சனைகளுக்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

விடத்தேர் மரத்தின் முக்கியப் பயன்கள்:

வாத நோய்கள்: விடத்தேர் பட்டை மற்றும் வேர் வாத நோய்கள், மூட்டு வலி மற்றும் தசைப்பிடிப்புகளைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

தோல் நோய்கள்: தோல் அலர்ஜி, கரப்பான் மற்றும் கிருமித் தொற்றுகளுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

செரிமானம்: வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு (DYSENTERY) மற்றும் வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தவும், செரிமான மண்டலத்தை வலுப்படுத்தவும் உதவுகிறது.

வலி நிவாரணி: உடலில் ஏற்படும் வலிகள் மற்றும் வீக்கங்களைக் குறைக்க உதவுகிறது.

காய்ச்சல்: காய்ச்சலைத் தணிக்க உதவும் மருத்துவப் பண்புகள் இதில் உள்ளன.

குறிப்பு: இந்த மூலிகையைத் தகுந்த சித்த மருத்துவர் அல்லது மூலிகை வல்லுநர் ஆலோசனையுடன் பயன்படுத்துவது நல்லது

# சினிமா

## இரண்டு நாட்களில் துரந்தர் 2 படம் செய்துள்ள வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



பெரிதும் எதிர்பார்ப்புடன் வெளிவரும் திரைப்படங்களின் வசூல் விவரங்களை தெரிந்துகொள்ள ரசிகர்கள் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள்.

அந்த வகையில் கடந்த 19ஆம் தேதி வெளியான துரந்தர் 2 திரைப்படம் முதல் நாளே ரூ. 220 கோடிக்கும் மேல் உலகளவில் வசூல் செய்து சாதனை படைத்த நிலையில், அடுத்தடுத்த நாட்களிலும் இப்படத்தின் வசூல் மிகப்பெரிய அளவில் இருக்கும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இரண்டு நாட்களில் துரந்தர் 2 திரைப்படம் உலகளவில் செய்திருக்கும் வசூல் குறித்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் உருவாகி வெளியான துரந்தர் 2 திரைப்படம் இரண்டு நாட்களில் உலகளவில் ரூ. 300 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதல் நாளை ஒப்பிடும்போது இரண்டாவது நாள் வசூல் சற்று குறைந்துள்ளது.

ஆனால், பொறுத்திருந்து பார்ப்போம் இனி வரும் நாட்களில் இப்படம் எவ்வளவு வசூல் செய்யும், அதன்மூலம் இந்திய சினிமாவில் என்னென்ன புதிய வசூல் சாதனைகளை படைக்கும் என்று.



பட விழாவுக்கு சேலையில் தாராள கவர்ச்சியான் லுக்கில் வந்திருக்கும் ஸ்டில்கள் வைரல் ஆகி இருக்கிறது.

## 2 நாட்களில் யூத் திரைப்படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



அசுரன் திரைப்படத்தில் தனுஷுக்கு மகனாக நடித்து பிரபலமானவர் கென் கருணாஸ். இதன்பின், வாத்தி, விடுதலை 2 ஆகிய திரைப்படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இதை தொடர்ந்து கென் இயக்கி நடித்துள்ள திரைப்படம்தான் யூத். இப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமாகியுள்ளார். இப்படத்தில் சுராஜ், தேவதர்ஷினி, நளினி, அனிஷ்மா அனில்குமார் மற்றும் மீனாட்சி ஆகியோர் நடித்திருந்தனர்.

நகைச்சுவை, எமோஷன், காதல் என முழு என்டர்டைனிங் படமாக யூத் இருந்தது. இதனால் இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில், 2 நாட்களை பாக்ஸ் ஆபிஸில் கடந்திருக்கும் யூத் திரைப்படம் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 2 நாட்களில் உலகளவில் இப்படம் ரூ. 13 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது. இனி வரும் நாட்களிலும் இப்படத்தின் வசூல் பாக்ஸ் ஆபிஸில் பட்டையை கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பூலோகம் தான் வைகுண்டம்



ஶ்ரீராமர் பூமியில் தோன்றிய காரணங்கள் நிறைவேறி விட்டன. ராமருடன் வந்த லக்ஷ்மணன் தன் இருப்பிடம் சேர்ந்துவிட்டான்.

சீதா தேவியாக பிறவி எடுத்த லக்ஷ்மி தேவியோ , ராமருக்கு முன்பாகவே வைகுண்டம் சென்று காத்திருக்கிறாள்.

ஆனால் ஶ்ரீ ராமரால் காலதேவன் கேட்டுக் கொண்டதன் படி அவ்வளவு சுலபமாக பூவுலகை விட்டு செல்ல முடியவில்லை. ராஜ்யத்தை தன் பிள்ளைகளுக்கும் மற்ற சகோதரர்களின் வாரிசுகளுக்கும் பிரித்து கொடுத்தாகிவிட்டது. பரதனும் சத்ருக்கனனும் ஶ்ரீராமருடன் புறப்பட தயாரானார்கள்.

ஆனாலும் ஶ்ரீ ராமரால் அவர் விருப்பப்படி தன் வாழ்வை துறக்க முடியவில்லை. என்ன காரணம்???

சாட்சாத் அந்த அனுமன் தான் முக்கிய காரணம். அனுமன் இரவும் பகலும் ராமருடைய அருகாமையிலேயே இருந்து அவர் பணிகளை செய்கிறான்; அவரை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டான்.

பகவான் ஶ்ரீ ராமர் இறுதியாக அனுமனுக்கு நிரந்தர பிரிவின் அவசியத்தை விளக்க எண்ணினார்.

ஒரு நாள் ராமர் அனுமன் பேசிக்கொண்டிருந்தார். அனுமன் அறியாதவாறு தன் விரலில் சூட்டியிருந்த மோதிரத்தை ஒரு பள்ளத்தில் விழ செய்தார் ராமர். அந்த மோதிரம் பள்ளத்தின் உள்ளே ஓடியது.

உடனே இராமன் அனுமனை நோக்கி. அனுமனே! அந்த மோதிரம் பள்ளத்தில் விழுந்து விட்டது. அந்த மோதிரத்தை எடுத்து வா என்று கூறினார்.

அனுமன் தன் உடலை மிகச்சிறிய பூச்சி வடிவாக்கிக் கொண்டு மோதிரம் விழுந்த பள்ளத்தில் நுழைந்தார்.

ஆனாலும் மோதிரமோ நழுவிக்கொண்டு பாதாளம் நோக்கி சென்று கொண்டிருந்தது. அனுமனும் விடாமல் மோதிரத்தை பின்தொடர்ந்தார்.

இறுதியில் அந்த மோதிரம் பாதாள லோகத்தின் வாயிலை அடைந்தது. பாதாள லோகத்தில் கதவு திறந்துகொள்ள மோதிரம் உள்ளே நழுவி விட்டது. பாதாள லோகத்தில் கதவும் மூடிக்கொண்டது.

மோதிரத்தை பின்தொடர்ந்த அனுமன் பாதாள லோகத்தில் வாசலில் நின்றான். அப்போது அங்கே பாதாள லோகத்தின் காவலரான காலதேவன் அனுமன் முன் வந்து என்ன தேடுகிறாய்? எனக் கேட்டான்.

அனுமனும் பகவான் ஶ்ரீராமரின் மோதிரம் உள்ளே சென்று விட்டது அதை எடுத்துச் செல்ல வந்தேன் என்றான்.

அப்படியா என்று புன்னகைத்தவாறு கேட்ட காலதேவன் பாதாள அறையின் கதவை திறந்து விட்டான். உள்ளே சென்று உன் மோதிரத்தை எடுத்துச்செல் என்று அனுமனிடம் கூறினான்.

அனுமனும் பாதாள அறைக்குள் நுழைந்தான் ஆனால் அவன் தேடி வந்த மோதிரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆம் அந்த அறையில் ஆயிரக்கணக்கான மோதிரங்கள் குவிந்து இருந்தன. அனைத்து மோதிரமும் ஒன்று போல் இருக்க அனுமன் குழம்பினான்.

காலதேவன் கூறினான். அனுமனே இவை அனைத்தும் காலச் சுழற்சியின் அடையாளங்கள். யுகங்கள் மீண்டும் மீண்டும் பிறக்கும்.

அப்போது பிரம்மா விஷ்ணு லக்ஷ்மி முதலான தெய்வங்கள் மீண்டும் மீண்டும் வரிசையாக அவதாரம் எடுப்பார்கள்.

அவர்கள் தாங்கள் எடுத்த பிறவியின் செயலை நிறைவேற்றுவார்கள் பின் மறைவார்கள். அவர்களை நாம் தடுக்கவோ அவர்களுடன் செல்லவோ முடியாது.

அனுமனே, ராமர் தன் மூல உரு எடுக்கும் நேரம் வந்துவிட்டது. அதை அணிந்து கொள்ள வேண்டும் என்று ராமர் தன் மோதிரத்தை தவற விட்டார். காலசுழற்சியின் விளக்கத்தை அறிந்து நீ உன் இருப்பிடம் செல்வாயாக என்று காலதேவன் அறிவுறுத்தினான்.

பிறப்பு இறப்பின் மகத்துவம் அறிந்த அனுமனும் மனம் தெளிந்த நிலையில் மீண்டும் ராமரை அடைந்தான்.

இப்போது பகவான் ஶ்ரீ ராமர் அனுமனிடம் விடை பெற எண்ணினார். ஆனாலும் தன் மூத்த மகன் போல் விளங்கிய அனுமனை எளிதில் உதற முடியவில்லை.

ஶ்ரீராமன் அனுமனை அழைத்தார். அனுமனை உனக்கு ஒரு உரிமை தருகிறேன். உனக்கு விருப்பமானால் நான் இப்பூமியிலிருந்து செல்லும்போது நீ என்னுடன் வரலாம் என்று கண்ணீர் மல்க கூறி அனுமனை கட்டித் தழுவிக் கொண்டார்.

அனுமன் உடல் சிலிர்த்தான். உள்ளம் நெகிழ்ந்தான், சற்று ஒரு கணம் யோசித்தான்.

பிரபு தாங்கள் என்னை உங்களுடன் அழைத்துச் செல்ல அனுமதி கொடுத்தமைக்கு நன்றி. ஆனால் ஒரு விளக்கம் மட்டும் கூறுங்கள்.

ஶ்ரீவைகுண்டத்தில் நீங்கள் ராமனாக - என் பிரபுவாக இருப்பீர்களா ? இல்லை அவதார புருஷன் விஷ்ணுவாக இருப்பீர்களா ? என அனுமன் கேட்டான்.

ஒரு நிமிடம் திகைத்தார் ராமர்.

என்ன சந்தேகம் என் மகனே! வைகுண்டத்தில் நாம் பகவான் விஷ்ணுவாகவும், சீதை லட்சுமி தேவியாகவும், லட்சுமணன் ஆதிசேஷனாகவும், பரதன் சத்ருக்கனன், சங்கு சக்கரம் ஆகவும் அவதாரத்தில் இருப்போம் என்றார் பகவான் ராமர்.

அனுமனோ தயக்கமின்றி பிரபு....

எனக்கு ஶ்ரீராமன்போதும் உங்களை ராமனாகவும் அன்னையை சீதாபிராட்டியாகவும் , மற்றவர்களை இப்புவியில் எடுத்த அவதாரங்களாவே வணங்க விரும்புகிறேன்.

நான் பூமியில் இருந்து உங்கள் நாமத்தை சொல்லிக் கொண்டே இருப்பேன் உங்கள் நாமத்தை பிறர் சொல்வதை கேட்டபடியே இருப்பேன். எனக்கு அந்த புண்ணிய நிலையை என்றென்றும் நீங்கள் அருளினால் போதும் என்றான் அனுமன்.

ஶ்ரீ ராம சீதா ஜெயம் !

ஶ்ரீ ராம ஜெய ராம ஜெய ஜெய ராமா !

## தினம் ஒரு தலைவர்கள்

# சுசேதா கிருபளானி வரலாறு

**வ.த.சுப்ரமணிய பிள்ளை (டிசம்பர் 11,1846- ஏப்ரல் 17,1909 ) வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை. தமிழறிஞர். திருப்புகழ் பாடல்களை தேடிக் கண்டடைந்து தொகுத்து வெளியிட்டார். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.**

வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை செங்கல்பட்டில் டிசம்பர் 11,1846-ல் தணிகாசலம் பிள்ளை-இலட்சுமி அம்மாளுக்கு பிறந்தார். திருத்தணிகை முருகன் இவர்களது குலதெய்வம். தணிகாசலம் பிள்ளை தனி ஆசிரியர் மூலம் வீட்டிலேயே சுப்ரமணிய பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி அளித்தார். தமிழும் தெலுங்கும் பயின்ற சுப்ரமணிய பிள்ளை 1857-ல் செங்கல்பட்டு மிஷன் ஸ்கூலில் சேர்ந்து உயர்நிலைக் கல்வியை முடித்து அங்கேயே சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் பள்ளி ஆய்வுக்காக வந்த வில்லியம் மில்லர் இவருடைய அறிவுத்திறன் கண்டு சென்னைக்கு வந்து மாகிண்டோஷ் ஸ்காலர்ஷிப் தேர்வு எழுதி வென்றால் தகுந்த வேலை கிடைக்கும் என்றார். அவ்வாறே சென்னை சென்று தேர்வெழுதி வென்றார். மில்லர் வாக்களித்தபடி இவருக்கு மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் தொகை கிடைத்தது. தொடர்ந்து U.C.S. தேர்வு எழுதி வென்றார். எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சுப்ரமணிய பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மில்லரின் பரிந்துரையின் பேரில், ஸ்காட்லாண்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியப்பணியில் சேர்ந்தார். 1868-ல் வள்ளியம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. பின்னர் ஆசிரியர் பணியில் இருந்து விலகி மில்லரின் நண்பர் ஹாட்ஸன் துரையின் பரிந்துரையின் பேரில் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். தலைமை எழுத்தராக பதவி உயர்வு பெற்று பின்னர் முன்சீஃப் தேர்வெழுதி வென்று 1882-ல் கடலூருக்கு மாவட்ட முன்சீஃப் ஆக நியமிக்கப்பட்டார். சோளிங்கர், விழுப்புரம் உள்ளிட்ட சில இடங்களில் பணியாற்றிய பின்னர் நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்றார்.

நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்ற பின்னர், மே 31, 1888-ல் அவர் எழுதிய குறிப்பில் "பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக் கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாமக்கல்லில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்பு கும்பகோணம் சென்றார். கும்பகோணம் பற்றி தனது நாட்குறிப்பில் "கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன்படுகிறது" என்று எழுதியிருக்கின்றார். பின்னர் திருத்துறைப்பூண்டியில் சில ஆண்டுகாலம் வசித்தார். மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் முன்சீஃபாகப் பணியாற்றிய பிள்ளை, 1901-ல் பணி ஓய்வு பெற்றார்.

வ.த.சுப்ரமணிய பிள்ளையின் மகன் புகழ்பெற்ற தமிழறிஞரான வ.சு. செங்கல்வராய பிள்ளை. சுப்ரமணிய பிள்ளையின் திருப்புகழ் பதிப்புப்பணி செங்கல்வராயபிள்ளையால் முன்னெடுக்கப்பட்டது

முருக வழிபாடு ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினங்களில் தவறாது முருகன் ஆலயத்திற்குச் செல்வதும், பாடல் பாடுவதும் இவர் வழக்கமாக இருந்தது. தினமும் தவறாமல் 32 முறை 'தணிகையன் துணை' என்று எழுதியபின் தணிகேசன் மீது பாடல் பாடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

மண்ணாசை என்கின்ற
மாயையில் வீழ்ந்து
மதிமயங்கி
எண்ணாது உனை
மறந்தேயிருதேன்
இனியாகிலும் என்
அண்ணா உன்றன்
பொன்னடிக் கமலம்
வந்தடையும் வண்ணம்
தண்ணார் அருள்புரியாய்
தணிகாசல சண்முகனே."

என்று திருத்தணிகை முருகன் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சிவபெருமான், உமையம்மை, மகாவிஷ்ணு, விநாயகர், நால்வர் மீதும் இவர் பல்வேறு காலகட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். திருப்புகழில் உள்ள 274 பாடல் பெற்ற தலங்களில் 176 இடங்களுக்குச் சென்று தரிசித்திருக்கிறார்.

திருப்பணிகள் அறச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை பல்வேறு மடங்களுக்கும்,



ஆலயங்களுக்கும் திருப்பணிகள் செய்தார். விளக்குகள் அளிப்பது, பாத்திரங்கள், ஆலயமணிகள், வேல், ஆபரணங்கள் போன்றவற்றைத் தருவது, ஆலயங்களைப் புதுப்பிப்பது, கவனிப்பின்றி இருக்கும் தெய்வச் சிலைகளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்தார். மதுரையில் இருக்கும் பழமுதிர்சோலை ஆலயம் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அதைச் சீர்செய்வதில் முன்னின்றவர் பிள்ளை. சைவப் பணிக்காகவே பிறந்த நகரத்தார்களுக்கு இவர் "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்பதை எழுதி அனுப்பி ஆலயத்தைச் சீர்த்திருத்துமாறு வேண்டிக் கொண்டார். இவர் முயற்சியின் பேரில் நாளடைவில் ஆலயம் சீரமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது.

திருப்புகழ் சுவடிகளுக்காக தொடர்ந்து பயணம் செய்தார். உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்கு கடிதம் எழுதி சுவடிகள் கோரினார். 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. மார்ச் 20, 1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன.

மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, அனந்த ராம ஐயர் போன்றவர்களின் உதவியுடன் திருப்புகழ் முதல் பதிப்பை வெளியிட்டார். ஜூன் 5,1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். ஏப்ரல் 9, 1895 அன்று திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார். சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் ஏப்ரல், 9 1895 அன்று இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். 'கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது'. (ரெங்கையா முருகன் கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அந்தத் தொகுப்பிற்கு தமிழறிஞர்களிடையே மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்த பாகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையும் பிள்ளைக்கு உண்டாக்கியது. உடனே அந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். ஓய்வுபெற்றபின் தமது இறுதிக் காலம் முழுக்கத் திருப்புகழ் பாடல்களைத் தொகுப்பதிலேயே ஈடுபட்டார். 1902-ல் திருப்புகழ் இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிட்டார். திருப்புகழ் மூன்றாவது பாகத்தைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறுவதற்கு முன் மறைந்தார்.

## விபத்தில் பாதிக்கப்பட்டவர் குடும்பத்துக்கு ரூ.61 லட்சம் இழப்பீடு: தீர்ப்பாயம் உத்தரவு

**புதுடெல்லி, மார்ச் 22:**

உத்தர பிரதேசத்தின் காஜியாபாத்தில் 2013-இல் நடைபெற்ற விபத்தின்போது கடுமையான பாதிப்புக்கு உள்ளான சத்யா வீர் சிங் குடும்பத்திற்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.61 லட்சம் இழப்பீடு வழங்க தில்லி மோட்டார் விபத்து இழப்பீடு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

காஜியாபாத்தின் ராஜ் நகர் விரிவாக்கச் சாலையில் 2013, செப்.25-இல் இந்த விபத்து நிகழ்ந்தது. இருசக்கர வாகனத்தில் சென்ற சத்யா வீர் சிங் மீது வேகமாக வந்த கார் மோதியதில் அவர் படுகாயமடைந்தார். இதைத் தொடர்ந்து அவருக்கு 90 சதவீதம் மூளை செயலிழந்தது. ஆனால், அவர் முற்றிலும் செயல்பாடற்று போனதால் இதை 100 சதவீத குறைபாடாக தீர்ப்பாயம் ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பாக இழப்பீடு கோரி 2014-இல் மனு தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அது தள்ளுபடி செய்யப்பட்டு தில்லி உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் மீண்டும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையின்போது பாதிக்கப்பட்ட வீர் சிங் உயிரிழந்ததைத் தொடர்ந்து அவரது வாரிசுகள் இந்த வழக்கைத் தொடர்ந்தனர்.

கடந்தாண்டு பிப்.11-இல் சத்யா வீர் சிங் உயிரிழந்தார். இருப்பினும், இதை விபத்துடன் தொடர்புபடுத்த தீர்ப்பாயம் மறுத்துவிட்டது.

கார் ஓட்டுநரின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் தெரிவித்தன. இதைத் தொடர்ந்து, இந்த மனுவை விசாரித்த அதிகாரி விஜய் குமார் ஜா, பாதிக்கப்பட்டவரின் மருத்துவ செலவுக்கு ரூ.9.38 லட்சம், எதிர்கால வருமான இழப்புக்காக ரூ.21.93 லட்சம் மற்றும் உதவியாளர் கட்டணங்களுக்காக ரூ.16.62 லட்சம் உள்பட மொத்தம் ரூ.61 லட்சத்துக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டார். மேலும், 30 நாள்களுக்குள் இந்தத் தொகையை பாதிக்கப்பட்டவரின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

## பண மோசடி வழக்கு: பேர்ல்ஸ் குழுமத்தின் ரூ.5,000 கோடி சொத்துகளை முடக்கிய அமலாக்கத் துறை



**புதுடெல்லி, மார்ச் 22:**

பண முறைகேடு தடுப்புச் சட்ட வழக்கில், சத்தீஸ்கரைச் சேர்ந்த பேர்ல்ஸ் குழுமத்துக்கு (பிஏசிஎல்) சொந்தமான மேலும் ரூ.5,000 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

இது தொடர்பாக அமலாக்கத் துறை வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் (பிஎம்எல்ஏ) கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பேர்ல்ஸ் குழுமத்துக்குச் சொந்தமாக தில்லி, பஞ்சாப் உள்ளிட்டப் பகுதிகளில் அமைந்திருந்த 126 அசையா சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு ரூ. 5,046.91 கோடி ஆகும். இதன்மூலம், இந்தக் குழுமத்துக்குச் சொந்தமாக இந்தியா மற்றும் வெளிநாடுகளில் அமைந்திருந்த ரூ. 22,656.91 கோடி சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2024-ஆம் ஆண்டு மறைந்த நிர்மல் சிங் பாங்கூ என்பவருக்குச் சொந்தமான இந்த ரியல் எஸ்டேட் நிறுவனம், விவசாய நிலங்கள் தருவதாகக் கூறி லட்சக்கணக்கானோரிடம் ரூ. 48,000 கோடி வரை வசூலித்து மோசடி செய்தது. இதுதொடர்பாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் அந்த நிறுவனத்தின் மீது சிபிஐ கடந்த 2014-இல் வழக்குப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியது. சிபிஐ வழக்கின் அடிப்படையில், அமலாக்கத் துறையும் கடந்த 2016-இல் பண முறைகேடு வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது. இதுவரை, இந்த வழக்கில் 5 குற்றப்பத்திரிகைகளை அமலாக்கத் துறை தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்பேரில், முதலீட்டாளர்களுக்குப் பணத்தைத் திருப்பித் தர குழுமத்தின் சொத்துகள் விற்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இந்தக் குழுமத்துக்குச் சொந்தமான சொத்துகளை அமலாக்கத் துறை அடையாளம் கண்டு தொடர்ந்து முடக்கி வருகிறது.

## இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக தேசிய பல் மருத்துவ ஆணையம்: மத்திய அரசு அமைப்பு

**புதுடெல்லி, மார்ச் 22:**

இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக தேசிய பல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக 3 தன்னாட்சி வாரியங்களுடன் தேசிய பல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது. பல் மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும், அந்தக் கல்வி உலகளாவிய தரநிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற நோக்கில், இந்த முக்கிய சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆணையத்தின் பணி என்ன?: தேசிய பல் மருத்துவ ஆணைய சட்டப் பிரிவுகளை அமல்படுத்துவதற்கான விதிமுறைகளை வகுத்தல், பல் மருத்துக் கல்வி நிறுவனங்களின் தரமதிப்பீட்டை மேற்கொள்ளுதல், பல் மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவித்தல், தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் கட்டண விதிமுறைகளுக்கு வழிகாட்டுதல்களை வகுத்தல், பொது சுகாதாரப் பல் மருத்துவம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் தர்மம் ஆகியவற்றுக்கு தரநிலைகளை உருவாக்குதல் ஆகிய பணிகளைத் தேசிய பல் மருத்துவ ஆணையம் மேற்கொள்ளும். இந்த ஆணையத்தின் தலைவராக மருத்துவர் சஞ்சய் திவாரி, பகுதி நேர உறுப்பினராக மருத்துவர் மௌசுமி கோஸ்வாமி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அரிய வகை புவி காந்த உற்பத்தி ஆலைகள் அமைப்பதற்கான ஏலம் தொடக்கம்: மத்திய அரசு அறிவிப்பு


**புதுடெல்லி, மார்ச் 22:**

ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் (எம்டிபிஏ) அரிய வகை புவி காந்தத்தை உற்பத்தி செய்யும் ஆலைகளை அமைப்பதற்கான ஏல நடைமுறைகளை மத்திய அரசு வெள்ளிக்கிழமை தொடங்கியது.

ரூ.7,280 கோடியில் சின்டர்ட் அரிய வகை நிரந்தர புவி காந்த உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் இதற்கான ஆலைகளை அமைக்க மத்திய அரசு ஏல அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மின்னணு வாகனங்கள், காற்று விசையாழிகள், நவீன மின்னணு பொருள்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த செயல்பாடுகளுக்கு நியோடைமியம்-இரும்பு-போரான் உள்பட அரிய வகை புவி காந்தங்கள் தேவைப்படுகின்றன. இவை தற்போது சீனாவில் இருந்து அதிகப்படியாக இறக்குமதி செய்யப்படும் நிலையில், அதைக் குறைத்து இந்தியாவை உலகளவில் அரிய வகை புவி காந்த மையமாக மாற்ற மத்திய அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் (எம்டிபிஏ) அரிய வகை புவி காந்த உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கான ஏலம் வெள்ளிக்கிழமை தொடங்கியது. ஏல விண்ணப்பத்தை சமர்ப்பிக்க மே 28-ஆம் தேதி வரை காலஅவசாம் வழங்கப்பட்டுள்ளது. ஏலத்துக்கு முந்தைய மாநாடு ஏப்ரல் 7-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தொழில்நுட்ப ஏலம் மே 29-ஆம் தேதி தொடங்குகிறது. மத்திய பொது கொள்முதல் (சிபிபி) வலைதளத்தில் வெளிப்படையான குறைந்த செலவு முறையில் (எல்சிஎஸ்) இணைய வழியில் தொழில்நுட்ப மற்றும் நிதி என இரண்டு கட்டங்களாக ஏலம் நடைபெறுகிறது.

## கத்தார் எரிவாயு விநியோகம் பாதிப்பு! இந்தியாவிலும் 5 ஆண்டுகளுக்கு பாதிப்பா?



**புதுடெல்லி, மார்ச் 22:**

கத்தார் எனர்ஜி நிறுவனத்தின் மீதான ஈரான் தாக்குதலின் விளைவாக, கத்தாரின் ஏற்றுமதி திறன் 17 சதவிகித அளவுக்கு பாதிப்படைந்துள்ளது. இதனால், ஆண்டுக்கு 1.28 கோடி டன் வரை உற்பத்தி முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், எரிவாயு விநியோகம் 3 முதல் 5 ஆண்டுகள் வரையில் பாதிக்கப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக முக்கிய எரிவாயு விநியோக நாடான கத்தாரில் ஏற்பட்டுள்ள இந்த பாதிப்பு, ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் எதிரொலிக்கும்.

இதனைத் தொடர்ந்து, கத்தாருடன் நீண்டகால கொள்முதல் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள நாடுகளுக்கு, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு இல்லாமல், சாத்தியமுள்ள அளவே ஏற்றுமதி செய்ய இயலும் என்று நிறுவனத்தின் தரப்பிலிருந்து அவசரகால அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதனால், இந்தியா உள்ளிட்ட நேரடி ஒப்பந்த நாடுகள் உடனடியாக பாதிப்படைவதுடன், ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் எரிவாயு விலை உயரும்.

## புதிய வருமான வரிச் சட்டம் ஏப்ரல் 1 முதல் அமல்: விதிகளை அறிவிக்கை செய்தது சிபிடிடி




**புதுடெல்லி, மார்ச் 22:**

எளிமைப்படுத்தப்பட்ட புதிய வருமான வரிச் சட்டம் 2025-க்கான விதிகளை மத்திய நேரடி வரிகள் வாரியம் (சிபிடிடி) வெள்ளிக்கிழமை அறிவிக்கை செய்தது.

'வருமான வரி விதிகள் 2026' என்ற பெயரிலான இந்த விதிகள், வரும் ஏப்ரல் 1-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும்' என்று அரசிதழ் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், ஊதியதாரர்களுக்கு வீட்டு வாடகைப் படிக்கான வரிச் சலுகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், வீட்டு உரிமையாளர் - வாடகைதாரர் இடையேயான உறவு குறித்த விவரங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

60 ஆண்டுகள் பழைமையான 'வருமான வரிச் சட்டம் 1961'-ஐ மாற்றும் வகையில், புதிய வருமான வரிச் சட்ட மசோதாவுக்கு நாடாளுமன்றம் கடந்த 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய சட்ட மசோதாவில் புதிய வரி விகிதங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை; மாறாக, கடினமான வருமான வரிச் சட்டங்களை வரி செலுத்துவோர் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் சட்டத்தின் மொழி நடை மட்டும் எளிமைப்படுத்தப்பட்டது.

குடியரசுத் தலைவரின் ஒப்புதலைத் தொடர்ந்து இந்த மசோதா சட்டமாக நிறைவேறியது. சட்டப் பிரிவுகளின் எண்ணிக்கை 819-லிருந்து 536-ஆகவும், சட்டத் தொகுதிகளின் எண்ணிக்கை 47-லிருந்து 23-ஆகவும் புதிய சட்டத்தில் குறைக்கப்பட்டது. வார்த்தைகளின் எண்ணிக்கை 5.12 லட்சத்திலிருந்து 2.6 லட்சமாக குறைக்கப்பட்டது. வரி விகித கணக்கு விவரத்தை வரி செலுத்துவோர் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் 39 புதிய வரி கணக்கீடு அட்டவணைகளும், 40 புதிய கணக்கீட்டு விதிமுறைகளும் புதிய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 25 % கட்டணத்தில் தற்காலிக தடையில்லாச் சான்றிதழ்: ஜல் போர்டு அனுமதி




**புதுடெல்லி, மார்ச் 22:**

கட்டுமான தொழில் நிறுவனங்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் வகையில், 25 சதவீதத் தொகையைச் செலுத்தி தற்காலிக தடையில்லாச் சான்றிதழ் (என்ஓசி) பெற தில்லி ஜல் போர்டு (டிஜேபி) வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக தில்லி நீர்வளத் துறை அமைச்சர் பர்வேஷ் சாஹிப் சிங் கூறியதாவது: என்ஓசி சான்றிதழ்களுக்கு அதிகப்படியான கட்டணம் முன்பணமாக வசூலிக்கப்படுவதால் பல்வேறு கட்டுமான திட்டங்கள் நிதிநெருக்கடியால் தடைபடுகின்றன மற்றும் தாமதமாகின்றன. 25 சதவீத கட்டணம் மூலம் தற்காலிக சான்றிதழ்களைப் பெறுவது இத்தகைய திட்டங்களுக்கு நிவாரணம் அளிக்கும். மீதமுள்ள தொகையை பின்னர் கட்டணச் செயல்முறையின்போது செலுத்தலாம். அதிகப்படியான கட்டணம் வீடுகள் கட்டுமானத்தில் தடையாக உள்ளதாக பல்வேறு புகார்கள் வந்துள்ளன. இது குடிமக்களுக்கும் அமைப்புக்கும் உகந்ததாக இல்லை. எனவே இதை மாற்ற தில்லி ஜல் போர்டு திட்டமிட்டு இந்த சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என தெரிவித்தார்.

## எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க சர்வதேச எரிசக்தி ஆணையம் யோசனை




**புதுடெல்லி, மார்ச் 22:**

மேற்காசியப் போரால் கச்சா எண்ணெய், எரிவாயு விலை உயர்ந்து வரும் நிலையில் எரிபொருளை குறைவாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும் என்று சர்வதேச எரிசக்தி ஆணையம் யோசனை தெரிவித்துள்ளது. இதனைப் பின்பற்றுவதன் மூலம் தனிநபர்கள் பயனடைவதுடன் தேசத்தையும் பொருளாதார பாதிப்புகளில் இருந்து காக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரீஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்த ஆணையம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அலுவலகம் உள்ளிட்ட இடங்களுக்கு ஒவ்வொருவரும் தனித்தனி கார்களில் பயணிக்காமல், குழுவாக ஒரே காரில் செல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தியாவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே விமானப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகபட்ச வேகத்துக்கான வரம்பை குறைக்க வேண்டும். வீட்டில் இருந்து அலுவலகப் பணிகளை மேற்கொள்வதை அதிகரிக்க வேண்டும். மின்வாகனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். எரிவாயுத் தட்டுப்பாட்டை சமாளிக்க உயிரி எரிபொருள் பயன்பாட்டை அதிகரிப்பது, மின்சார அடுப்புகளைப் பயன்படுத்துவது, சூரிய மின் உற்பத்தியை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச கச்சா எண்ணெய் போக்குவரத்தில் சுமார் 20 சதவீதம் ஹோர்முஸ் நீரிணை வழியாகவே நடைபெறுகிறது. இப்போது ஏற்பட்டுள்ள போரால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு, பல நாடுகளுக்கு எரிபொருள் விநியோகம் குறைந்துவிட்டது. விலையும் அதிகரித்துள்ளது.

இதனைச் சமாளிக்க சர்வதேச எரிசக்தி ஆணையத்தில் உறுப்பினராக உள்ள நாடுகள் தங்கள் அவசரகால இருப்பில் உள்ள 400 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய்யை விடுவிக்க கடந்த 11-ஆம் தேதி ஒப்புக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையத்தின் செயல் இயக்குநர் ஃபாதிக் பிரோல் இது தொடர்பாக கூறுகையில், 'இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளித்து விநியோகத்தை சீராக்கத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் ஆணையம் வழங்கி வருகிறது. எரிபொருள் விநியோகச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இதில் தொடர்புடைய அனைத்து நாட்டு அரசுகளுடனும் பேச்சு நடத்தப்படுகிறது. முக்கியமாக, அதிக உற்பத்தி செய்யும் நாடுகள், அதிகம் பயன்படுத்தும் நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளோம்.

## 'ஏஐ' நுட்பத்தில் தலைவர்களை தவறாக சித்திரிக்கத் தடை: தேர்தல் ஆணையம் எச்சரிக்கை




**புதுடெல்லி, மார்ச் 22:**

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) நுட்பத்தில் தனி நபர்களின் அடையாளத்தையோ, தோற்றத்தையோ தவறாக சித்திரிக்கும் விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு விளம்பரங்கள் மேற்கொண்டால் அவை 3 மணி நேரத்துக்குள் நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மின்னணு ஊடகங்கள், சமூக ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களை வெளியிட விரும்பும் அனைத்து அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் மாநில அல்லது மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் முன் அனுமதி பெறுவது கட்டாயம்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அந்த விளம்பரங்களை ஒளிபரப்புவதற்கு குறைந்தது 3 நாள்களுக்கு முன்னதாகவும், மற்றவர்கள் ஒரு வாரம் முன்னதாகவும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற 48 மணி நேரத்துக்குள் அவை பரிசீலிக்கப்படும். தேவைப்பட்டால் மேல்முறையீட்டுக்காக இந்திய தேர்தல் ஆணையத்துக்கும் அவை அனுப்பப்படும். டீப்ஃபேக் எனப்படும் துல்லியமான போலி உருவாக்கங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் பதிவுகளால் ஏற்படும் சவால்களைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் தீவிர வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அதன்படி, செயற்கை நுண்ணறிவு அல்லது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட அனைத்து பதிவுகளிலும் குறைந்தது 10 சதவீத அளவுக்கு ஏஐ மூலம் உருவாக்கப்பட்டது என்ற தகவல் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஒருவரின் அனுமதியின்றி அவரது அடையாளம், குரல் அல்லது தோற்றத்தை தவறாகச் சித்திரிக்கும் பதிவுகள் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளன. சமூக வலைதளங்களில் அத்தகைய பதிவுகள் கண்டறியப்பட்டால் 3 மணி நேரத்துக்குள் அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## படங்களின் ஆபாச சித்தரிப்பு: எலான் மஸ்க்கின் ஏ.ஐ. நிறுவனம் மீது அமெரிக்க மாணவிகள் வழக்கு




**புதுடெல்லி, மார்ச் 22:**

அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க்கிற்குச் சொந்தமான 'எக்ஸ்ஏஐ' நிறுவனத்தின் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தங்களின் புகைப்படங்களை ஆபாசமாகச் சித்தரித்ததாகக் கூறி, அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தைச் சேர்ந்த 3 பள்ளி மாணவிகள் வழக்குத் தொடுத்துள்ளனர்.

பள்ளி ஆண்டுமலர் மற்றும் விழாக்களில் எடுக்கப்பட்ட இவர்களின் சாதாரணப் புகைப்படங்களை, அடையாளம்தெரியாதநபர்கள் 'க்ராக்' ஏ.ஐ. கருவி மூலம் ஆபாசப் படங்களாகவும், விடியோக்களாகவும் மாற்றியுள்ளனர்.

பிற ஏ.ஐ. நிறுவனங்கள் ஆபாச உள்ளடக்கங்களைத் தடை செய்துள்ள நிலையில், மஸ்க்கின் நிறுவனம் மட்டும் 'கட்டுப்பாடற்ற' உள்ளடக்கங்களை உருவாக்குவதை ஒரு வணிக உத்தியாக முன்னெடுப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறார்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இந்த வழக்கை ஒரு கூட்டு வழக்காக அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்து எக்ஸ்ஏஐ நிறுவனம் பதிலளிக்காத நிலையில், ஒருவரின் அனுமதியின்றி ஆபாசமாகச் சித்தரிக்கும் உள்ளடக்கங்களுக்குத் தங்கள் தளத்தில் இடமில்லை என 'எக்ஸ்' சமூக ஊடகம் மட்டும் விளக்கம் அளித்துள்ளது.




## ஓய்வு பெற்ற தலைமைச் செயலக அதிகாரி வீட்டில் திருடிய 2 இளைஞர்கள் கைது



**சென்னை, மார்ச்.22:** ஓய்வு பெற்ற தலைமைச் செயலக அதிகாரி வீட்டில் திருடிய இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னை பெரவள்ளூரில் உள்ள பெரியார் நகர் 1-வது தெருவில் வசிப்பவர் அசோக்குமார் (72). தலைமைச் செயலகத்தில் இணைச் செயலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இவர் கடந்த 17-ம் தேதி வீட்டைப் பூட்டிவிட்டு மனைவியுடன் வேளச்சேரியிலுள்ள அண்ணன் வீட்டுக்குச் சென்றார்.மறுநாள் காலை வீடு திரும்பியபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, பீரோவில் வைத்திருந்த 22 பவுன் தங்க நகைகள், 2 கைக்கடிகாரங்கள், ரூ.20 ஆயிரம் மற்றும் பட்டுப் புடவைகள் திருடுபோயிருப்பது தெரியவந்தது.

அதிர்ச்சி அடைந்த அவர் இது தொடர்பாக பெரவள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல்கட்டமாக சிசிடிவி கேமரா காட்சிகள் அடிப்படையில் ஆராயப்பட்டது.

இதில் அசோக்குமார் வீட்டில் திருட்டில் ஈடுபட்டது திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தைச் சேர்ந்த முருகன் என்ற தீனா (28), ஜெகதீஷ் (28) என்பது தெரியவந்தது.

தலைமறைவாக இருந்த இருவரையும் போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் முருகன் பெரியபாளையம் காவல் நிலைய சரித்திரப் பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கெனவே 15 திருட்டு வழக்குகளும், ஜெகதீஷ் மீது 3 திருட்டு வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. இதையடுத்து, இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## பொதுமக்களிடம் ரூ.77 லட்சம் முதலீடு வசூலித்து மோசடி: நிதி நிறுவன நிர்வாகிகளுக்கு சிறை தண்டனை

**சென்னை, மார்ச்.22:** அதிக லாபம் தருவதாகக் கூறி ரூ. 77 லட்சம் வரை முதலீடுகளை வசூலித்து மோசடியில் ஈடுபட்ட நிதி நிறுவன நிர்வாகிகளுக்கு 4 ஆண்டு கள் சிறை தண்டனை விதித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் ரயில் நிலையம் அருகே கிரீன் வேர்ல்டு பவுண்டேஷன் டிரஸ்ட் என்ற நிதி நிறுவனத்தை அப்பகுதியை சேர்ந்த பிரசன்னா, கோவையை சேர்ந்த சரவணன், கூடுவாஞ்சேரி நந்திவரத்தைச் சேர்ந்த நீலகண்டன் ஆகியோர் கூட்டாக நடத்தி வந்தனர்.

அதிக லாபம் தருவதாகக் கூறி ரூ.77 லட்சம் வரை முதலீடுகளை வசூலித்த இவர்கள், உறுதியளித்த தொகையை தராமல், குறைந்த தொகையை திருப்பிக் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின்பேரில் நிதி நிறுவன நிர்வாகிகள் 3 பேர் மீதும் செங்கல்பட்டு பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு சென்னை நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.முருகானந்தம் முன்பாக விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் டி.பாபு ஆஜராகி வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றம்சாட்டப்பட்ட பிரசன்னா, சரவணன், நீலகண்டன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.13.96 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இந்த அபராதத் தொகையில் முதலீட்டாளர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், இழப்பீடு போக மீதித்தொகை இருந்தால் அதை அரசின் கணக்கில் சேர்க்க வேண்டும், என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஆம்பூர் அருகே தந்தையின் 3-வது மனைவி படுகொலை

ஆம்பூர்: ஆம்பூர் அருகே மகனின் காதல் திருமண விவகாரத்தில் நடந்த குடும்பத் தகராறில் தந்தையின் 3-வது மனைவி கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த பாலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் முனியன். இவரது 2-வது மனைவி ராஜேஸ்வரி. இவர்களது மகன் அபிமன்யு. ராஜேஸ்வரி கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு உடல்நிலை குறைவால் உயிரிழந்த நிலையில் முனியன் பேர்ணாம்பட்டு அடுத்த பெரியதாமல்செருவு கிராமத்தைச் சேர்ந்த கவிதா (42) என்பவரை 3-ஆவதாக திருமணம் செய்தார்.

முனியனின் இரண்டாவது மனைவிக்கு பிறந்த மகன் அபிமன்யு சென்னையில் தன்னுடன் பணியாற்றி வந்த வேறு சமூகத்தைச் சேர்ந்த பிரதீபா(24) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

திருமணத்துக்கு பிறகு அபிமன்யு தனது மனைவியுடன் பாலூர் பகுதியில் குடியிருந்து வந்தார். இந்நிலையில், அபிமன்யு மாற்று சமூக பெண்ணை, திருமணம் செய்தது பிடிக்காமல் முனியனுக்கும் கவிதாவுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று அபிமன்யு மனைவி பிரதீபாவுக்கும் கவிதாவுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதை அபிமன்யு தாத்தா சாமுண்டி வந்து கவிதாவை கண்டித்துள்ளார்.

பின்னர் ஆத்திரமடைந்த அவர், அரிவாளால் கவிதாவை சரமாரியாக வெட்டியுள்ளார். தடுக்க வந்த முனியனுக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. இதில் கவிதா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த உமராபாத் போலீஸார் வந்து உடலை மீட்டு பரிசோதனைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்தின் பி4 நுழைவாயில் மார்ச் 23 முதல் மூடல்: சென்னை மெட்ரோ தகவல்




**சென்னை, மார்ச்.22:** நந்தனம் மெட்ரோ ரயில் நிலையத்தின் பி4 நுழைவாயில் வரும் 23-ம் தேதி முதல் நிரந்தரமாக மூடப்படுவதாக மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: நந்தனத்தில் நடைபெற்று வரும் மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் காரணமாக, நந்தனம் மெட்ரோ நிலையத்தின் பி4 நுழைவாயில் பிஎஸ்என்எல் அலுவலகம் நோக்கி செல்லும் வழி, வரும் மார்ச் 23-ம் தேதி முதல் நிரந்தரமாக மூடப்படுப்படுகிறது.

இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை சுலபமாக்குவதற்கு, நந்தனம் மெட்ரோ நிலையத்தில் உள்ள தற்போதைய B4 நுழைவாயிலை மூடுவது அவசியமாகும்.

இது நீண்டகால அடிப்படையில் போக்குவரத்து இணைப்பு, பயணிகளின் வசதி மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதை உறுதி செய்யும். மேலும், தற்போதுள்ள முதலாம் கட்ட நந்தனம் மெட்ரோ நிலையத்துக்கான அணுகல் வசதி, இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் புதிதாகத் திறக்கப்படவுள்ள மெட்ரோ நிலைய நுழைவாயில் வழியாக பயணிகளுக்குக் கிடைக்கும்.

பயணிகள் தங்களின் பயணத்தை திட்டமிட்டு, அருகிலுள்ள மாற்று நுழைவாயில்களை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், பி4 நுழைவாயிலின் அதேதிசையில் அமைந்துள்ள ஏ2 மற்றும் ஏ3 நுழைவாயில்கள். மேலும் எதிர்புறத்தில் அமைந்துள்ள பி1, பி2, மற்றும் பி3 நுழைவாயில்கள், இந்த நுழைவாயில்கள் அனைத்தும் அண்ணா சாலையிலேயே அமைந்துள்ளன. இவை முழுமையாக செயல்படுவதால், பயணிகள் எந்தவொரு சிரமமுமின்றி இவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பயணிகள் எளிதாகச் செல்வதை உறுதி செய்வதற்காக, மெட்ரோ ரயில் நிலைய வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள முக்கிய இடங்களிலும் போதுமான வழிகாட்டிப் பலகைகள் மற்றும் அடையாளப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், பயணிகள் உதவிக்கு நிலைய பணியாளர்களை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## முன்னாள் ராணுவ வீரர்களுக்கு தேர்தல் பணியாற்ற காவல் துறை அழைப்பு




**சென்னை, மார்ச்.22:** தேர்தல் பணியாற்ற முன்னாள் ராணுவ வீரர்களுக்கு சென்னை காவல் துறை அழைப்பு விடுத்துள்ளது. தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு அடுத்த மாதம் 23-ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 'தேர்தல் பணியாற்ற விருப்பம் உள்ள முன்னாள் ராணுவ வீரர்கள் விண்ணப்பிக்கலாம்' என சென்னை காவல் துறை தேர்தல் பிரிவு அதிகாரிகள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பணியாற்ற விருப்பம் உள்ள ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரிகள், போலீஸார், முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் முன்னாள் துணை ராணுவ வீரர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட சென்னை காவல் இணை ஆணையர் அலுவலகத்தில் செயல்படும் தேர்தல் பிரிவு ஆய்வாளரைத் தொடர்பு கொண்டு வரும் 26-ம் தேதிக்குள் தங்களின் பெயர், முகவரியை பதிவு செய்துகொள்ளவும்.

தேர்தலில் பணிபுரிவோருக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் பெற்றுத் தரப்படும். விருப்பம் உள்ளவர்கள் சென்னை வடக்கு மண்டல ஆய்வாளர் ஆனந்த் 9498145519, மேற்கு மண்டல ஆய்வாளர் சாந்தினி தேவி 9840106030, கிழக்கு மண்டல ஆய்வாளர் பத்மகுமாரி 9498197388, தெற்கு மண்டல ஆய்வாளர் துர்கா தேவி 9498003162 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பறவைக் காய்ச்சல் எதிரொலி: கிண்டி சிறுவர் இயற்கை பூங்கா மூடல்




சென்னை: கிண்டி சிறுவர் பூங்காவில் பறவைகளுக்கு பறவைக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அப்பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சென்னையில் குழந்தைகளுக்கு முக்கிய பொழுதுபோக்கு இடமாக கிண்டி சிறுவர் பூங்கா இருந்து வருகிறது. இதில் நாளொன்றுக்கு சுமார் 2 ஆயிரம் பேரும், வார இறுதி நாட்களில் சுமார் 5 ஆயிரம் பேரும் பார்வையிட வருகின்றனர்.

சென்னை அடையாரில் அண்மையில் காகங்கள் அதிக அளவில் இறந்து கிடந்தன. அவற்றின் மாதிரிகளை சோதனைக்கு அனுப்பியதில் பறவைக் காய்ச்சலால் இறந்தது உறுதிசெய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சென்னை மாநகரம் முழுவதும் தீவிர கண்காணிப்புப் பணிகளை மாநகராட்சி, கால்நடை பராமரிப்புத் துறை, பொது சுகாதாரத் துறை அலுவலர்கள் மேற்கொண்டனர்.

அதன் பிறகு சென்னையில் ஒரே நேரத்தில் அதிக அளவில் பறவைகள் இறப்பு இல்லை.

இந்நிலையில் கிண்டி சிறுவர் பூங்காவில் சில பறவைகளுக்கு பறவைக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளதால் உடனடியாக அப்பூங்கா மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வனத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: கிண்டி சிறுவர் இயற்கை பூங்கா உடனடியாகவும் அடுத்த அறிவிப்பு வரும் வரையும் பொதுமக்கள் வருகைக்கு மூடப்படுகிறது.

இப்பூங்காவில் உள்ள வேடந்தாங்கல் ஈரநிலப் பறவைகள் கூண்டில் சில பறவைகளுக்கு பறவைக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பூங்கா தற்காலிகமாக முடப்படுகிறது.

இந்திய அரசால் வெளியிடப்பட்ட "பறவைக் காய்ச்சல் தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைத் திட்டம் (திருத்தம் 2021)" வழிகாட்டுதல்கள், முன்னர் வழங்கப்பட்ட அறிவுரைகள் ஆகியவை துறையின் மூலம் முறையாக பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நிலுவையில் உள்ள வழக்கு விவரங்களை வேட்பாளர்கள் ஊடகங்களில் விளம்பரம் செய்ய வேண்டும்

### தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தல்




**சென்னை, மார்ச்.22:** தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நிலுவையில் உள்ள வழக்குகள் விவரங்களை விளம்பரம் செய்ய வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் அல்லது தண்டனை விவரங்களை உரிய படிவங்களில் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்ய வேண்டும். அதேபோல், அத்தகைய வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் கட்சிகளும் அந்த விவரங்களை ஊடகங்கள் மற்றும் கட்சியின் அதிகாரப்பூர்வ வலைதளங்களில் வெளியிட வேண்டும்.

தேர்தல் ஆணையம் இதற்கென பிரத்யேக படிவங்களை வரையறுத்துள்ளது. வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளுக்கு அடுத்த நாள் முதல், வாக்குப் பதிவு முடிவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பு வரை 3 முறை வெவ்வேறு நாட்களில் இந்த விளம்பரங்களை வெளியிட வேண்டும்.

வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட 48 மணி நேரத்துக்குள் அல்லது வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பாகவே (இதில் எது முந்தையதோ அதன்படி) விவரங்களை வெளியிட வேண்டும்.

இது தொடர்பான அறிக்கையை அடுத்த 72 மணி நேரத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான முழுமையான அறிவுரைகள், அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பட்டியலை அறிந்து கொள்ள பொதுமக்கள் மற்றும் வேட்பாளர்கள் www.elections.tn.gov.in என்ற இணையதளத்தை பார்வையிடலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கள் இறக்க, விற்க அனுமதி கோரிய வழக்கில் 6 ஆண்டுகளாக பதிலளிக்காத அரசுக்கு நீதிபதிகள் எச்சரிக்கை



**மதுரை, மார்ச்.22:** தமிழகத்தில் கள் இறக்கவும், விற்கவும் அனுமதி கோரிய வழக்கில் 6 ஆண்டுகளாக பதில் மனு தாக்கல் செய்யாத நிலையில் ஏப். 27-க்குள் பதிலளிக்காவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தூத்துக்குடி சிலோன் காலனியைச் சேர்ந்த ஆர்.ஆறுமுகம், உயர் நீதிமன்ற கிளையில் 2020-ல் தாக்கல் செய்த மனு: தமிழகத்தில் மதுவிலக்கு சட்டம் 1937-ல் கள் இறக்கவும், விற்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையால் பனை மரம் வளர்ப்போர் பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர்.

கள்ளுக்கான தடையை விலக்கக்கோரி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது அரசு தரப்பில் கள்ளில் போதைக்காக பல வேதிப்பொருட்கள் கலப்பதால் தடை விதிக்கப்பட்டுள்ளது. கள் உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கள் போதைப்பொருள் அல்ல. உடலுக்கு நல்லது. வெளிநாட்டு மதுபானங்களின் விற்பனையை பெருக்குவதற்காகவே கள்ளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மதுபானங்களைவிட கள்ளில் குறைவாகவே போதை உள்ளது. எனவே மதுவிலக்கு சட்டத்தில்கள் இறக்கவும், விற்கவும் தடை விதிப்பட்டிருப்பதை நீக்கி அனுமதி தர உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

இந்த மனு 2020-ல் விசாரணைக்கு வந்தபோது தமிழக உள்துறை செயலர், தமிழ்நாடு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை செயலர் பதிலளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த வழக்கு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், எம்.ஜோதிராமன் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

பின்னர் நீதிபதிகள், 2020-ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இப்போது வரை தமிழக அரசு பதிலளிக்கவில்லை. அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

இதனால் ஏப்ரல் 27-க்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். தவறினால் அடுத்த விசாரணையின் போது அபராதம் விதிக்கப்படும் என உத்தரவிட்டனர்.

# 14 அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடிகள்: தேர்தல் ஆணையம் நடவடிக்கை



**சென்னை, மார்ச்.22:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 14 அடுக்குமாடி குடியிருப்பு களில் வாக்குச்சாவடிகளை தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது.

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் அடுக்கு மாடி குடியிருப்பு கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. இதுபோன்ற குடியிருப்புகளில் வசிப்போர் சிலர் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க தயக்கம் காட்டுகின்றனர். பல இடங்களில் இதுபோன்ற குடியிருப்புகளில் சுமார் 500-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.

அங்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கும் அளவுக்கு வாக்காளர்கள் இருப்பதால், இதுபோன்ற அடுக்கு மாடிகுடியிருப்புகளில் வாக்குச் சாவடிகளை அமைக்க தேர்தல் ஆணையம் பல ஆண்டுகளாக ஆலோசித்து வந்தது.

அதன்படி கடந்த ஆண்டு நடைபெற்ற வாக்காளர் பட்டியல்சிறப்பு தீவிர திருத்தத்தின்போது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருஅடுக்குமாடி குடியிருப்பில் வாக்குச்சாவடி உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்-2026-ல் தமிழகம் முழுவதும் 12 தனியார் அடுக்கு மாடிகுடியிருப்புகளிலும், ஒரு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியஅடுக்கு மாடி குடியிருப்பிலும் என 13 அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டன.

5 மாவட்டங்கள்: அதேபோன்று, தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் 4 வாக்குச்சாவடிகளும், சென்னையில் 5 வாக்குச்சாவடிகளும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் தலா 2 வாக்குச்சாவடிகளும், மதுரையில் ஒருவாக்குச்சாவடியும் அமைக்கப் பட்டுள்ளன.

# சின்னசேலத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்க ரூ.1.98 கோடியில் பஸ்நிலையம் திறப்பு

**சின்னசேலம்சி, மார்ச்.22:** ன்னசேலத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்க ரூ1.98 கோடியில் புதிய பேருந்து நிலையம் கட்டி திறக்கப்பட்டதுடன், ரூ.30 கோடியில் நான்கு வழிச்சாலை பணிகள் துவங்கி தீவிரமாக நடந்து வருகிறது. இதன்மூலம் சின்னசேலம் பகுதி மக்களின் 75 ஆண்டுகால கோரிக்கையை திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றி உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நகராட்சி அந்தஸ்து பெற்ற சிறப்பு நிலை பேரூராட்சியாக சின்னசேலம் உள்ளது. சின்னசேலம் வழியாக சேலம், சென்னை போன்ற நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பேருந்துகள் செல்கிறது.

அதுமட்டுமல்லாமல் சின்னசேலத்தில் இருந்தும், சின்னசேலம் வழியாகவும் கச்சிராயபாளையம் உள்ளிட்ட பல்வேறு நகர, கிராம பகுதிகளுக்கு ஒரு நாளைக்கு 100 முறைக்குமேல் பேருந்துகள் வந்து செல்கிறது.Rail Freight

ஆனால் முன்பு பேருந்து நிலையம் குறுகலாக இருந்ததால், பேருந்துகள் நின்று செல்ல போதிய இடவசதி இல்லை. அதனால் சேலம், சென்னை செல்லும் பேருந்துகள் சாலை ஓரத்திலேயே நின்று சென்றது. இதனால் பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள்.

சின்னசேலம் நகர பகுதியில், அம்சாகுளம் சாலையில் இருந்து அண்ணா நகர் வரை தார் சாலை செல்கிறது. இந்த சாலை கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்புவரை அகலமாக 100 அடி சாலையாக காணப்பட்டது. காலப்போக்கில் சாலையோர ஆக்கிரமிப்புகளால் மிகவும் குறுகி காணப்பட்டது. இதனால் போக்குவரத்து நெரிசல் இருந்ததுடன், அடிக்கடி விபத்துகளும், உயிர்பலி சம்பவங்களும் ஏற்பட்டது.

இதனால் சின்னசேலம் நகர மெயின் சாலையின் இருபுறமும் ஒதுங்கக்கூட இடம் இல்லாமல் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வந்தது. இதனால் இந்த சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி, சென்டர் மீடியனுடன் கூடிய நான்கு வழிச்சாலை அமைக்க வேண்டும் என பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன் மற்றும் அமைச்சர்கள் என பலரிடம் மனு கொடுத்து வந்தனர்.

ஆனால் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன் தொடர் முயற்சியால், சின்னசேலம் பகுதி மக்களின் 75 ஆண்டுகால இரு பெரும் கோரிக்கையை நிறைவேற்றி தந்த தமிழக முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் எ.வ.வேலு, கே.என்.நேரு ஆகியோருக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த உதயசூரியன் எம்எல்ஏவுக்கும், சின்னசேலம் பேரூராட்சி நிர்வாகத்திற்கும் சின்னசேலம் பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்.

## ஈத் பெருநாள் தொழுகை



போளூர் நகராட்சியில் ஈது பெருநாள் சிறப்பு தொழுகை கசீருல் ஜமாஅத் அஹ்லுஸ்ஸீன்னத் இன்று காலை9 மணிக்கு பெரிய மஜித் ஈக்காவில் மௌலவி முஹம்மத் இக்பால் பெரிய மஜீத் இமாம் &கதீப் தலைமையில் சிறப்பு தொழுகையும் ,பயானும், குத்பா நடைபெற்றது. போளூர் சுற்றியுள்ள இஸ்லாமிய பெருமக்கள் குழந்தைகள் புத்தாடை அணிந்து நறுமணம் பூசி தொழுகையில் கலந்து கொண்டார்கள். தொழுகைக்குப் பின்பு அனைவரும் ஈத் முபாரக் தெரிவித்துக் கொண்டார்கள்.காவல்துறை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.விழா ஏற்பாடுகள் ஜமாஅத் நிர்வாகிகள் ஊழியர்கள் செய்தார்கள்.

# தமிழகத்தில் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கு வேலை நேரத்தை 8 மணி நேரமாக குறைக்க உத்தரவு

**சென்னை, மார்ச்.22:** 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கான வேலை நேரத்தை 8 மணி நேரமாக குறைக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை தொழிலாளர் நல தீர்ப்பாயம் உத்தர விட்டுள்ளது.

நாடு முழுவதும் கடந்த 2005-ம் ஆண்டு தொடங்கப்பட்ட அவசரசிகிச்சையுடன் கூடிய 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தில், தமிழகத்தில் 38 மாவட்டங்களிலும் 1,353 ஆம்புலன்ஸ் வாகனங்களுடன் செயல்படுத்தப்படுகிறது. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள், தினமும் 12 மணி நேரம் என்ற அடிப்படையில் 2 ஷிப்ட்டுகளாக பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், வேலை நேரத்தை 8 மணி நேரமாகக் குறைத்து 3 ஷிப்ட்டுகளாக்கக் கோரி தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில் உடன்பாடு எட்டப்படாததால் இந்த விவகாரம் சென்னைதொழிலாளர் நல தீர்ப்பாய விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

தொழிலாளர் நல தீர்ப்பாயத்தில் அதன் தலைவரான நீதிபதி பி.முருகன் முன்பாக இந்த வழக்குவிசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் சங்கம் தரப்பில், "12 மணி நேரம் ஓய்வில்லாமல் பணியாற்றுவதால் தூக்கமின்மை ஏற்பட்டு உடல்நலம் பாதிக்கப்படுகிறது. அவசர நேரங்களில் ஆம்புலன்ஸ் வாகனங்களை அதிவேகமாக தூக்கமில்லாமல் ஓட்டிச்செல்லும்போது விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்படுகிறது.



108 ஆம்புலன்ஸ்களில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்கு தனியாக ஓய்வறைகளோ, கழிப்பிட வசதிகளோ இல்லை. அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும்நோயாளிகளுக்கென தனித்தனியாக உள்ள கழிப்பறைகளையும் 108 ஊழியர்கள் பயன்படுத்த அனுமதிப்பதில்லை. இதனால் அவசர நேரங்களில் அவர்கள் பெரிதும் திண்டாட நேரிடுகிறது. பொதுவாக 12 மணி நேர வேலை என்பது தொழிலாளர் சட்டங்களுக்கு விரோதமானது.

எனவே எங்களின் வேலை நேரத்தை 12 மணி நேரத்தில் இருந்து 8 மணிநேரமாகக் குறைக்க வேண்டும்" என வாதிடப்பட்டது.108 ஆம்புலன்ஸ் சேவையை இயக்கிவரும் இஎம்ஆர்ஐ - ஜிஹெச்எஸ் நிறுவனம் தரப்பில்,"ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு நாடு முழுவதும் ஒரேமாதிரியாக 12 மணி நேர வேலைத் திட்டமே பின்பற்றப்படுகிறது.

அதைஏற்றுக்கொண்டுதான் ஊழியர்களும் பணியில் சேர்ந்துள்ளனர். அவர்களுக்கு 12 மணி நேரத்துக்கான ஊதியம்தான் வழங்கப்படுகிறது. 12 மணி நேர வேலைக்கு சம்மதம் தெரிவித்து பணியில் சேர்ந்துவிட்டு தற்போது 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் எனக்கோர முடியாது" என வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, "சர்வதேச தொழிலாளர் அமைப்பு விதிகளின்படி தினமும் 8 மணி நேரமே பணியாளர்களுக்கான உடல் உழைப்பு வேலை நேரமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 12 மணி நேரவேலை நேரம் என்பது தொழிலாளர் சட்டங்களுக்கு விரோதமானது. ஓவர்-டைம் பார்ப்பது என்பது தொழிலாளர்களின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. எனவே 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களின் 12 மணிநேர பணி நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும்.

இந்த உத்தரவு குறித்து தொழில் தகராறு சட்டத்தின் கீழ் முறையாக அரசிதழில் அறிவிக்கை செய்தநாளில்இருந்து 30 நாட்களுக்குள் 8 மணிநேர பணி நடைமுறைஅமலுக்கு வரும். அதுவரை 12 மணி நேரம் பணியாற்றும் ஊழியர்களுக்கு கூடுதல் பணிக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

ஓய்வறை, கழிப்பறை வசதி: 108 ஆம்புலன்ஸ் ஊழியர்களுக்கென தனியாக ஓய்வறை மற்றும் கழிப்பறை வசதிகளைசெய்து கொடுக்க வேண்டும். அதேபோல மருத்துவமனை களில் உள்ள கழிப்பிடங்களை சுத்தமாகப் பராமரித்து அதன் ஒரு சாவியை 108 ஆம்புலன்ஸ் பெண் பணியாளர்கள் வசம் ஒப்படைக்கவேண்டும். மேலும், தமிழகம் முழுவதும் அரசு அலுவலக கட்டிடங்களில் உள்ள கழிப்பறைகளை 108 ஆம்புலன்ஸ் பெண் ஊழியர்கள் எந்நேரமும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அறிவிப்பையும் தமிழக அரசு வெளியிட வேண்டும். ஆம்புலன்ஸ் நிறுத்தப்படும் இடங்களில் தனி ஓய்வறை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

# உலக வனநாளையொட்டி 6 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய வனத்துறை முடிவு

தர்மபுரி : உலக வனநாளையொட்டி தர்மபுரி மாவட்டத்தில் வரும் ஜூலை - செப்டம்பர் மாதம் வரை 6 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய வனத்துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தின் வனப்பரப்பை 23.7 சதவிகிதத்தில் இருந்து 33 சதவிகிதமாக உயர்த்தும் நோக்கோடு, தமிழ்நாடு பசுமை இயக்கத்தை, தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் 24ம் தேதி தொடங்கி வைத்தார்.மாநில செய்திகள்

அடுத்த 10 ஆண்டு காலத்தில் நகர்ப்புற பகுதிகள், விவசாயப் பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், ஏரிக்கரைகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள், ஆற்று படுகைகள், பொது நிலங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் மர வகைகள் நடப்படும்.



இந்த இயக்கத்தின் கீழ், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உயர்ரக மரங்களான சந்தனம், செம்மரம் மற்றும் ஈட்டி போன்ற மரங்களை வளர்க்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

இயற்கை வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி வனப்பகுதியில் வசிக்கும் பழங்குடியினர், விவசாயிகள், கிராம மக்கள் போன்ற உள்ளூர் சமூகங்களின் வருமானத்தை பெருக்கவும் இந்த திட்டம் உதவும். கடந்த ஆண்டு 10 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு வைத்து பல லட்சம் மரக்கன்றுகள் மாவட்டத்தில் நடப்பட்டுள்ளது. வனம், அரசு அலுவலகம், பள்ளி, கல்லூரி வளாகம், விவசாய நிலங்களில் நடப்பட்டுள்ளது.

இன்று (21ம் தேதி) உலக வனநாள் என்பதால் தர்மபுரி மாவட்டம் முழுவதும் வனத்துறை சார்பில் உலக வனநாள் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி வனத்துறை சார்பில் ஆங்காங்கே மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடக்கிறது.

நடப்பாண்டு பள்ளிகளில் அரசு பொதுத்தேர்வு மற்றும் தேர்தல் விதிமுறை அமலில் உள்ளதால், பள்ளி மாணவர்களுடையே மரம் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. உலக வனநாளையொட்டி தர்மபுரி மாவட்டத்தில் 6 லட்சம் மரக்கன்றுகள் நட வனத்துறை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் வனங்களின் பரப்பளவு 1716 சதுர கிலோ மீட்டர். இம்மாவட்டக் காடுகள் கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றின் எல்லைகள் சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ளது. தமிழகத்தில் வனப்பரப்பு அதிகம் உள்ள 2வது மாவட்டம் தர்மபுரி. இம்மாவட்டத்தில் 38 சதவீத வனப்பகுதி உள்ளன.

தர்மபுரி மாவட்டத்தில் வனப்பரப்பை அதிகரிக்கவும், வனப்பரப்பை அதிகரிக்கவும் உலக வனநாளையொட்டி 6 லட்சம் மரக்கன்றுகள் வனத்துறை மூலம் நடப்பட உள்ளது. இந்த பணி வரும் ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.




# குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் திமுக ஆட்சியில் சுதந்திரமாக சுற்றுகின்றனர்: அன்புமணி குற்றச்சாட்டு



**சென்னை, மார்ச்.22:** 'குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் திமுக ஆட்சியில் சுதந்திரமாக சுற்றி வருகின்றனர்' என்று பாமக தலைவர் அன்புமணி குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தை அடுத்த வேடநத்தத்தில் 12-ம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில், ஏற்கெனவே ஜாமீனில் வெளியே வந்த ஒரு கொடூரனை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மன்னிக்கவே முடியாத குற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக சுற்றி வருகின்றனர். அவர்களை கண்காணிக்கவோ, அவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவோ காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சாப விமோசனம்

தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு சூழல் சந்தி சிரிக்கிறது. தமிழகத்தின் சாபக்கேடு என்றால் அது தற்போது நடைபெற்று வரும் திமுக ஆட்சி தான்.

தமிழகத்துக்கான சாப விமோசனம் ஏப்.23-ம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்தான்.

அந்த தேர்தலில் பாமக, அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு மக்கள் வாக்களிப்பதன் மூலம் தமிழகத்துக்கு சாப விமோசனம் கிடைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இபிஎஸ் டெல்லி பயணம் குறித்து முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்: கருணாநிதி பயணத்தை சுட்டிக்காட்டி அதிமுக பதில்




**சென்னை, மார்ச்.22:** அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் டெல்லி பயணத்தை முதல்வர் ஸ்டாலின் விமர்சித்த நிலையில், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் டெல்லி பயணத்தை சுட்டிக்காட்டி, அதிமுக ஐடி பிரிவு பதில் கொடுத்துள்ளது.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று முன்தினம் டெல்லி சென்று, என்டிஏ கூட்டணியில் தொகுதிப் பங்கீடு குறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் ஆலோசனை நடத்தினார்.

இதை விமர்சித்து முதல்வர் ஸ்டாலின் நேற்று தனது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது: எதிர்க்கட்சித் தலைவரும், சகாக்களும் டெல்லியில் இருப்பது எதற்காக? தமிழகத்துக்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்கா? தமிழகத்தில் நிறைவேற்றப்படாமல் முடக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தவா? சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்கவா? இல்லை.

தேர்தல் களத்தைச் சந்திக்கவே டெல்லியின் சம்மதம் வேண்டும் என்கிற நிலையில் உள்ளவர்களின் கையில் தமிழகம் சிக்கினால், ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும்.

சுயநலனுக்காக சொந்தக் கட்சியை அடமானம் வைத்ததுபோல, தமிழகத்தையும் டெல்லியிடம் அடகு வைக்கத் தயங்காதவர்கள் அவர்கள். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் தரும் விதமாக, அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: டெல்லிக்கு சென்று கூட்டணி பேசுகின்றனர் என்று புலம்புகிறார் ஸ்டாலின்.

2011 தேர்தலுக்காக நீங்களும், உங்கள் தந்தை கருணாநிதியும் டெல்லியில் காங்கிரஸ் தலைமைக்காக 6 மணி நேரத்துக்கு மேல் காத்திருந்து கூட்டணி பேசினீர்களே.

உங்கள் குடும்பத்துக்கு ஒரு பிரச்சினை என்றதும், மகளுக்கு 'திஹார்' என்று காங்கிரஸ் சொல்ல, 'பகீர்' என்று பதறி, வயதான காலத்திலும் டெல்லிக்கு சென்று, தீர்ப்புக்கு சில நிமிடங்கள் முன்பு சோனியா காந்தியை சந்தித்தாரே கருணாநிதி.

அறிவாலய மேல் மாடி ரெய்டை பார்த்து பயந்து, கீழ் மாடியில் "63 நாயன்மார்களை கொடுக்கிறேன்" என்றும் கூட்டணி பேசினாரே. தென் தமிழக மக்கள் வெள்ளத்தில் தத்தளித்தபோது, மக்கள் எக்கேடு கெட்டுப்போனால் என்ன என்று நீங்கள் டெல்லியில் இண்டியா கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தினீர்களே. அடுத்தவர்களை விமர்சிக்க உங்களுக்கு தகுதி இல்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அதிமுக என்ற கட்சியின் தலைவரை கிள்ளு கீரையாக பாஜக பயன்படுத்துகிறது: திருமாவளவன் பேட்டி




சென்னை: திமுக கூட்டணி வலுவாக உள்ளது என விசிக தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார். திமுகவுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை சுமூகமாக சென்றுக் கொண்டிருக்கிறது. போயஸ் தோட்டத்தை தேடி வந்த காலம் மாறி, இன்று டெல்லியைத் தேடி செல்லும் நிலைக்கு அதிமுக தள்ளப்பட்டுள்ளது.

அதிமுக என்ற கட்சியின் தலைவரை கிள்ளு கீரையாக பாஜக பயன்படுத்துகிறது என கூறினார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com**